**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**17.06.2009**

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**ஜூன் 2009ல் நடந்த மனித உரிமை மீறல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலைய மரணம் | 01 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 06 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 102 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 19 |
| 5. | வகுப்பறை வன்முறை | 20 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 11 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 19 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 07 |
| 9. | குழந்தை திருமணம் | 05 |
| 10. | மீனவர்கள் மீது தாக்குதல் | 01 |
| 11. | கந்து வட்டிக் கொடுமை | 03 |
| 12. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 01 |
| 13. | ரேசன் அரிசி கடத்தல் | 03 |
| 14. | மணல் கொள்ளை | 01 |
| 15. | பொதுவானவை | 12 |
| 16. | மொத்தம் | 213 |

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-05
## 01.06.2009 முதல் 30.06.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 01.06.09 | **மதுரை மாவட்டம்:** கூடக்கோவில் பகுதியைச் சேர்ந்த குருசாமி மகள் நிரோஜா. SSLC தேர்வில் தோல்வியடைந்த நிரோஜா வீட்டில் தனியாக இருந்தபொழுது மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்துக்கொண்டாள். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 2. | 01.06.2009 | **மதுரை மாவட்டம்:** அங்காளேஸ்வரி +2 படித்துவிட்டு வீட்டில் இருந்தபோது பெத்தானியாபுரத்தைச் சேர்ந்த கார்த்திக், வைரவன், செல்வம் ஆகியோர் கடத்திச் சென்றுள்ளனர். இது பற்றி வேலுமணி போலிசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 3. | 01.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** சுந்தரி SSLC தேர்வில் குறைந்த மதிப்பெண் எடுத்ததால் மனமுடைந்து உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்துக்கொண்டார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| 4. | 01.06.2009 | **தேவி மாவட்டம் :** செந்தில் குமாருக்கும் ஆண்டாளுக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பப் பிரச்சினையில் இருவரும் விசம் குடித்து தற்கொலை முயற்சியில் ஆண்டாள் இறந்து விட்டார். பிழைத்துக் கொண்ட செந்தில் குமார் தன் மகனுடன் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை– தற்கொலை | தமிழ் சுடர் |
| 5. | 01.06.2009 | **தூத்துக்குடி மாவட்டம் :** இமானுவேல் முதல் மனைவி இறந்துவிட்டதால் 19 வயதுடைய யமுனா நந்தினியை 2வது திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில் யமுனா நந்தினி பெற்றோர் வீட்டுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். வீடு திரும்பவில்லை. இது பற்றி போலீசில் புகார். வழக்குப் பதிவு செய்து விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 6. | 01.06.2009 | **நெல்லை மாவட்டம்:** கீழ ஆம்பூரில் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக தொடர்ந்து போராடி வந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த மூன்று கம்யூனிஸ்டுகள் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இது பற்றி போலீசில் புகார். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | ஜனசக்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | 01.06.2009 | **திருச்சி மாவட்டம்:** பொன்னம்மாள் 3ம் ஆண்டு சட்டக் கல்லூரியில் படித்து வருகிறார். பொன்னம்மாளை கோட்டை ஆய்வாளர் கண்ணன் வழக்கில் கைது செய்வதாக மிரட்டல். இதனால் பயந்த மாணவி தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை. காவல் நிலையச் சித்ரவதை. | பிரபாகர், RMA |
| 8. | 02.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** பிரபாகரன் தாய் 2 வருடங்களுக்கு மன்பு விபத்தில் மரணமடைந்தார். விபத்திற்கான நஷ்ட ஈடு இது வரை கிடைக்காததால் இது பற்றி பல முறை கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளார். இந்நிலையில் நேற்று விசம் குடித்துவிட்டு கலெக்டரிடம் மனு கொடுக்க வந்துள்ளார். மயங்கிய நிலையில் கீழே விழுந்தவரை போலீசார் விசாரித்தபோது நடந்த விசயங்களைக் கூறியுள்ளார். அப்பொழுது அவருடைய மனுவை யாரும் பெற்றுக் கொள்ளவில்லை. மேலும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல காவலர்கள் முன்வரவில்லை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. காவல் நிலையச் சித்ரவதை. | தீக்கதிர் |
| 9. | 02.06.2009 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** விவேக், சென்னை செயிண்ட ஜோசப் இன்ஜினியரிங் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். இவர் கம்ப்யூட்டர் சைன்ஸ் தேர்வில் தவறுதலாக வேறு ஒருவருடைய ரிக்கார்டை லாக் ஆன் செய்துவிட்டார். இதனால் கல்லூரி நிர்வாகம் அவரை ஒரு வாரம் சஸ்பென்ட் செய்ததுடன் தேர்வு எழுத அனுமதி மறுத்துவிட்டது. இந்நிலையில் பெற்றோரை அழைத்து வரச் சொல்லி அலைக்கழித்துள்ளனர். இதனால் மனமுடைந்த விவேக் கல்லூரி விடுதியில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். | கல்லூரி வன்முறை. தற்கொலை | தினகரன் |
| 10. | 03.06.2009 | **மதுரை மாவட்டம்:** சேகர், கூலி வேலை செய்து வந்துள்ளார். சம்பவ நாளன்று வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியவர் சம்பளத்தை மனைவி சிவமலரிடம் கொடுத்துள்ளார். சிவமலர் சம்பளம் குறைவாக உள்ளது என்று சேகரிடம் கேட்டுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்ட்டுள்ளது. இதனால் மனமுடைந்த சிவமலர் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துத் தற்கொலை. சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிராக வன்முறை. தற்கொலை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | 03.06.2009 | **கோவை மாவட்டம்:** கோவையில் உள்ள கல்வி நிறுவனத்தில் நடைபெறும் அநியாயக் கட்டணக் கொள்ளையைத் தடுத்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் இந்திய மாணவர் சங்கத்தினர் மனு அறித்தனர். | கல்விக் கட்டணக் கொள்ளை | தீக்கதிர் |
| 12. | 03.06.2009 | **மதுரை மாவட்டம்:** தெற்குவாசல் முத்துச் ஆறுமுக ஆசாரி தெருவைச் சேர்ந்தவர் சண்முக சுந்தரத்தின் மகள் முத்துச் செல்வி. முத்துச் செல்வியும் அப்பகுதியைச் சேர்ந்த முத்துவேலும் காதலித்துள்ளனர். இது சண்முகசுந்தரனுக்குத் தெரிய வந்தது. இதைக் கண்டித்த சண்முகசுந்தரம் முத்துச்செல்விக்கு வேறு மாப்பிள்ளை பார்த்து நிச்சயம் செய்து திருமணம் செய்ய ஏற்பாடு. முத்துவேல் சண்முகசுந்தரனாரை அரிவாளால் வெட்டிக் கொலை. இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை. | தீக்கதிர் |
| 13. | 04.06.2009 | **மதுரை மாவட்டம்:** அரசு இராஜாஜி மருத்துவ மனையில் பிரசவ வார்டில் லஞ்சம் வாங்கிய 2 பெண் ஊழியர்களை லஞ்ச ஒழிப்புப் பிரிவு போலீசார் கைது செய்தனர். | மருத்துவமனை சேவிலியர் லஞ்சம் | தினமணி |
| 14. | 04.06.2009 | **மதுரை மாவட்டம்:** தெற்குவாசல் முத்துப் பிள்ளை காம்பவுண்டைச் சேர்ந்த மாரியின் மூத்த மகள் 23 வயதுடையவர். உடல் நலக் குறைவால் வாய் பேச முடியாமல் நடக்க இயலாமல் இருந்தார். மாரி வீட்டருகே வசிக்கும் பாண்டி (45/09) குடி போதையில் மாரியின் மூத்த மகளைப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது பற்றி மாரி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 15. | 04.06.2009 | **மதுரை மாவட்டம்:** சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் நடனக்குழுவில் பணிபுரிந்தார். போதிய வருமானம் இல்லாமல் சிரமப்பட்டு வந்தவர். இதனால் மனமுடைந்தவர் விசம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | வறுமை | தீக்கதிர் |
| 16. | 04.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே பாப்பநாயக்கன்பட்டியைச் சேர்ந்தவர் அழகர்சாமி. அழகர்சாமி தனக்குச் சொந்தமான வீட்டின் மின் கட்டணம் செலுத்தாததால் மனி இணைப்பு துண்டிக்கப்பட்டது. மின் இணைப்புப் பெற கோட்டைப்பட்டி செயற்பொறியாளர் | லஞ்சஊழல் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அலுவலகத்தில் பணம் கட்டியுள்ளார். இந்நிலையில் மீண்டும் மின் இணைப்பைப் பெற வயர்மேன் சீனிவாசன் ரூ. 500 லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி அழகர்சாமி போலீசார் புகார். | | |
| **17.** | 04.06.2009 | **மதுரை மாவட்டம்:** தல்லாகுளத்தைச் சேர்ந்தவர் கிரி பாஸ்கர். அடிதடி வழக்கில் அரி கிருஷ்ணனும் கிரிபாஸ்கரும் கைது செய்யப்பட்டு 2003 அடைந்தள்ளனர். இதில் சிறைக்குள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் அரிகிருஷ்ணன், கிரி பாஸ்கரை அடித்து தலையில் தாக்கியுள்ளார். இதில் கிரிபாஸ்கர் வழுக்கி விழுந்து உயிரிழந்ததாக வழக்கை மூடிவிட்டனர். இந்நிலையில் கிரிபாஸ்கர் உறவினர் சாவில் மர்மம் இருப்பதாகக் கூறி மனித உரிமை ஆணையத்தில் புகார் செய்துள்ளார். | சிறைக் கைதி சாவு, சிறைச்சாலை வன்முறை | தினத்தந்தி |
| **18.** | 04.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** ரயில் நிலையப் பகுதி அருகே சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வகையிலும் நோய்களைப் பரப்பும் வகையிலும் மிளகாய் எண்ணெய் ஆலை செயல்படுவதாகப் புகார் | சுற்றுச் சூழல் மாசுப்படுத்துதல் | தீக்கதிர் |
| **19.** | 04.06.2009 | **சென்னை மாவட்டம்:** சாந்தோம், கண்ணகி நகர், செயிண்ட் ராயல் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவி ராஜலட்சுமி (15). 10ம் வகுப்பு படித்து முடித்த இவர் 10 வகுப்பில் 390 மதிப்பெண் பெற்றுள்ளார். +1ம் வகுப்பில் அக்கவுண்ட்ஸ் குரூப்பில் சேர விண்ணப்பித்துள்ளார். ஆனால் பள்ளி நிர்வாகம் குறைவாக மதிப்பெண் எடுத்துள்ளதாகக் கூறி வரலாறு பிரிவில் சேர்த்துள்ளனர். இதனால் மனமுடைந்த மாணவி தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை | வகுப்பறை வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| **20.** | 05.06.2009 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் பெரியசாமி நகரைச் சேர்ந்த மாணவி கார்த்திகா. இஞ்சினியரிங் கல்லூரி மாணவியான இவர் விடுமுறையில் வீட்டிற்குத் திரும்பும் பொழுது அப்பகுதியைச் சேர்ந்த குணசேகரன் கேலி செய்தள்ளார். இது பற்றி போலீசில் புகார் | ஈவ் டீசிங். பெண்களுக்கு எதிரான வன்முறை. | தினமலர் |
| **21.** | 05.06.2009 | **மதுரை மாவட்டம்:** தொப்புலாம்பட்டியைச் சேர்ந்தவர் வீரணன் மகள் வைதேகி. இவர் +2 முடித்துவிட்டு மதுரையில் தனியார் கம்ப்யூட்டர் நிறுவனத்தில் பயிற்சி பெற்று வந்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை.. கொலை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இந்நிலையில் இவர் சம்பவத்தன்று மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இருந்தார். இந்நிலையில் போலீசார் வழக்,குப் பதிவு செய்து விசாரணை. | | |
| 22. | 05.06.2009 | **மதுரை மாவட்டம்:** உயாநீதிமன்ற கிளையில் செயல்பட்டு வரும் மருத்துவமனையை குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே பூட்டிச் செல்வதால் திடீர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற முடியவில்லை என்று உயர்நீதிமன்ற ஊழியர்கள் புகார் தெரிவித்துள்ளனர். | மருத்துவமனை அலட்சியம் | தினத்தந்தி |
| 23. | 05.06.2009 | **சென்னை மாவட்டம்:** புழல் சிறைக் கைதிகளுக்கு வரும் சாப்பாடு சரியான நேரத்தில் வராமல் காலதாமதமாக வருவதாகக் கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர் | சிறைச்சாலை வன்முறை | தினத்தந்தி |
| 24. | 05.06.2009 | **திருச்சி மாவட்டம்:** முசிறி அருகே தா. பேட்டையை அடுத்த சூரம்பட்டியைக் சேர்ந்த இளையராஜா பிறப்புச் சான்றிதழ் கேட்டு முசிறி தாலுகா அலுவலத்தைத் தொடர்பு கொண்ட போது வருவாய் ஆய்வாளர் பரிந்துரை வாங்கி வருமாறு கூறியுள்ளனர். இதற்காக தும்பலம் ஆர்.ஐ. ராஜேஸ்வரியை அணுகியுள்ளார். பிறப்புச் சான்றிதழ் பெற ரூ. 250/– லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | லஞ்சம் | தினகரன் |
| 25. | 05.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் வெங்கடாச்சலபுரத்தைச் சேர்ந்தவர் ராஜூவின் மகள் முருகேஸ்வரி. 10ம் வகுப்பு படித்து வந்த முருகேஸ்வரி விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ளார். அப்பொழுது பெற்றோர்கள் மேல் படிப்புப் படிக்க வற்புறுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த முருகேஸ்வரி வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். இது பற்றிப் பெற்றோர்கள் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 26. | 05.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை அருகே உள்ள கிராமம் ஆடையாம்பட்டி காளியம்மன்கோவில் பூசாரிகள் விளாம்பட்டி காவல் நிலையத்திற்குப் புகார் கொடுக்கச் சென்றபோது எப்.ஐ.ஆர். பதிய ரூபாய் 20 ஆயிரம் லஞ்சம் கேட்ட சப் இன்ஸ்பெக்ரைக் கண்டித்து திண்டுக்கல் மாவட்டம் காவல் தறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தைக் கிராம மக்கள் முற்றுகையிட்டனர் | காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 27. | 06.06.2009 | **திருச்சி மாவட்டம்:** சமயபுரம் டோல்கேட் அருகே உள்ள வாழவந்தான்புரம் பகுதியைச் | குழந்தை கடத்தல் | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த கண்ணன், அகிலா தம்பதியினரின் குழந்தை காயத்திரி (1½ வயது). அகிலாவின் ஒன்றரை வயதுக் குழந்தைக்கு அரசு ஆஸ்பத்திரியில் நிதி வாங்கித் தருவதாகக் கூறி லால்குடியைச் சேர்ந்த தனமணி (46) என்ற பெண் குழந்தையைக் கடத்தி ரூ. 3,000க்கு விற்றுள்ளார். இது பற்றிப் போலீசார் நடத்திய விசாரணையில் ஒரு வருட காலத்தில் சுமார் 6 குழந்தைகளைத் தனமணி கடத்தி விற்றுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. | | |
| 28. | 06.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி, சித்துராஜபுரம் அருகே உள்ள தனியார் பட்டாசு ஆலை. தனியார் பட்டாசு ஆலையில் திடீரெனத் தீப்பிடித்தது. | பட்டாசு ஆலையில் தீ விபத்து | தினத்தந்தி |
| 29. | 06.06.2009 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டிஅருகே உள்ள சக்கம்பட்டி ஆதி திராவிடர் காலனி. ஆதி திராவிடர் காலனியில் உள்ள குடிசைக்குள் புதைக்கப்பட்டிருந்த ஆண் குழந்தையை நாய் கிளறி வெளியே இறந்துள்ளது. இது பற்றி போலீசில் புகார். வழக்குப் பதிவு, விசாரணை | ஆண் சிசு கொலை | தினகரன் |
| 30. | 06.06.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** திசையன்–விளையில் தொழிலதிபர்கள் கந்துவட்டிக்குப் பணம் கொடுத்து துன்புறுத்துவதாக ராஜசேகர், சார்லஸ், போலீசில் புகார், வழக்குப் பதிவு, விசாரணை. | கந்து வட்டிக் கொடுமை | தினமலர் |
| 31. | 06.06.2009 | **சேலம் மாட்டம் :** சகாதேவபுரத்தில் உள்ள கைத்தறி மற்றும் துணை நூல் இயக்குநர் அலுவலகம். கைத்தறி மற்றும் துணை நூல் இயக்குநர் அலுவலகத்தில் லஞ்சம் பெற்ற துணைஇயக்குனர் மற்றும் ஆய்வாளர்கள் கைது செய்யப்பட்டனர். | லஞ்சம் | தினமலர் |
| 32. | 06.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை கல்லூரணி மேலத் தெருவைச் சேர்ந்தவர் சிவக்குமார் மனைவி சுப்புலட்சுமி. சுப்புலட்சுமியை அவரது கணவர் சிவக்குமார் வரதட்சணை கேட்டுச் சித்திரவதை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணைக் கொடுமை | தினமலர் |
| 33. | 06.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் அருகே குண்டுப்பட்டியைச் சேர்ந்த சிவக்குமார் மனைவி மஞ்சுளா. மஞ்சுளாவிற்கும் அப்பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரனுக்கும் கள்ளத் தொடர்பு இருந்துள்ளது. சிவக்குமார் வெளியூர் சென்றிருந்த நேரத்தில் அங்கு வந்த ராஜேந்திரனுக்கும் மஞ்சுளாவிற்கும் இடையில் | பெண்களுக்கு எதிரான வன்முறை. கொலை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த ராஜேந்திரன் மஞ்சுளா மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துள்ளார். இது குறித்து போலீசில் புகார். வழக்குப் பதிவு. | | |
| 34. | 09.06.2009 | **மதுரை மாவட்டம்:** ஜெய்ஹிந்துபுரம், ஜீவா நகர் மாதர் சங்கம். ஜீவா நகர் பகுதியில் பெண் மரணம் தொடர்பாக அவரது கணவரிடம் விசாரித்து நடவடிக்கை எடுக்கக் கோரி சுப்பிரமணியபுரம் பகுதியில் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. | பெண்களுக்கு எதிரான வன்முறை.. | தினமணி |
| 35. | 09.05.2009 | **மதுரை மாவட்டம்:** மேலப் பொன்னகரத்தைச் சேர்ந்த வக்கீல் ராஜ் குமார். இவர் செக்கணூரணியில் போக்குவரத்திற்கு இடையூறாக ஆம்னி வேனை நிறுத்தியிருந்தார். இது குறித்து எஸ்.குமாருக்கும் ராஜ்குமாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில் ராஜ்குமார் போலீசில் புகார் செய்தார். அப்பொழுது எஸ்.குமார் மற்றும் போலிஸ்காரர் வேல்முருகன் ராஜ்குமார் 3 பவுன் தங்க செயின் மற்றும் மொபைல் போன் ரூ.2,000 பணத்தைப் பறித்ததாக போலீசில் புகார். | காவல் நிலையவன்முறை | தினமலர் |
| 36. | 09.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி வைரவபுரம் 3வது வீதியைச் சேர்ந்த ரவி மகள் கவிதா. கவிதா தனியார் ஆஸ்பத்திரியில் உதவியாளராக வேலை பார்த்து வந்தவர். இரவு 8.30 மணிக்கு வேலை முடிந்து வீடு திரும்பும்போது ஒரு டு வீலரில் வந்தவர் கவிதாவை வெட்டியுள்ளார். மேலும் ஒரு பெண்ணைத் தாக்கியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்குப் பதிவு செய்து விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 37. | 09.06.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் புன்னை நகரைச் சேர்ந்த அன்டோ மால்ட் மனைவி ரோஸ் காட்லி. ரோஸ் காட்லி கணவர் குடும்பத்தினர் அதிக வரதட்சணை கேட்டு கொடுமைப் படுத்தியுள்ளனர். இது பற்றி ரோஸ் காட்லி போலீசில் புகார். வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை வரதட்சணைக் கொடுமை | தீக்கதிர் |
| 38. | 09.06.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தேவிபட்டிணம் சித்திரக் கோட்டையைச் சேர்ந்த மோகனா. 17 வயதுடைய மோகனா தன் சகோதரர் வீட்டில் தனியாக இருந்தபோது அப்பகுதியைச் சேர்ந்த கணேசன் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளார். அவரிடம் இருந்து தப்பிய | பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை. தற்கொலை முயற்சி | இந்தியன் எக்ஸ்பிரஸ் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மோகான அவமானம் தாங்காமல் மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குளிக்க முயற்சித்துள்ளார். பலத்த காயமடைந்த மோகனா மருத்துவமனையில் அனுமதி. | | |
| 39. | 09.06.2009 | **கோவை மாவட்டம்:** மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள். மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் தரையில் அமர வைக்கப்படுகின்றனர். இது பற்றிக் கேட்டபோது பள்ளியில் பெஞ்ச் பற்றாக் குறை என்று கூறியுள்ளனர். இந்நிலையில் இதற்கான நிதியை அரசு ஒதுக்கி 10 மாதம் ஆகியும் இதற்கான வேலை தொடங்கப்படவில்லை. | வகுப்பறை வன்முறை | இந்தியன் எக்ஸ்பிரஸ் |
| 40. | 10.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** வெள்ளோடு பாரதிபுரத்தைச் சேர்ந்த தண்டபாணி மனைவி சரவணவள்ளி. சரவணவள்ளி தன் கணவரைத் தனிக்குடித்தனம் நடத்த அழைத்துள்ளார். இதற்குத் தண்டபாணி மறுக்கவே இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் தண்டபாணி தகப்பனார் அழகரின் தூண்டுதலின் பேரில் சரவணவள்ளியை உயிரோடு மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்தார். இதில் பலத்த காயமடைந்த சரவணவள்ளி மருத்துவ மனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. கொலை | தினகரன் |
| 41. | 10.06.2009 | **திருச்சி மாவட்டம்:** மணச்சநல்லூர் அரசு மேநிலைப் பள்ளி ஆசிரியர் எல். ஆர். ஜமுனா. தலைமை ஆசிரியர் நன்கொடை என்ற பெயரில் ரூபாய்5,38,000/– வசூலித்ததாகப் புகார். இது பற்றி விசாரணை. | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 42. | 10.06.2009 | **தேனி மாவட்டம்:** அருணா தேவி, மல்லிகா, சத்யா. புதுக்கோட்டையில் உள்ள தனியார் ஆலையில் 3 ஆண்டுகளில் 250க்கும் மேற்பட்ட பெண்கள் சுமங்கலி திட்டம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வேலை. பணி முடிந்த பெண்களுக்கு மில் நிர்வாகம் கொடுத்த செக் பணம் இல்லாமல், திரும்பி வந்துள்ளது. இது பற்றிப் பெண்கள் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை & சுமங்கலித் திட்டம். | தினமலர் |
| 43. | 10.06.2009 | **விழுப்புரம் மாவட்டம்:** செஞ்சி தாலுகா தொரப்பாடியைச் சேர்ந்த ஆறுமுகம். ஆறுமுகம் தன் மகனுக்குக் கடந்த 6ம் தேதி நடந்த திருமணத்திற்காகத் திருமண உதவித்திட்டத்தின் மூலம் நிதி உதவி பெற மேல் மலையனூர் ஒன்றிய அலுவலகத்தில் அணுகியுள்ளார். அப்பொழுது வட்டார சமூக | லஞ்சம் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நல விரிவாக்க அலுவலர் மஞ்சுளா ரூ.500 லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி ஆறுமுகம் போலீசில் புகார். வழக்குப் பதிவு செய்து விசாரணை. | | |
| 44. | 10.06.2009 | **திருச்சி மாவட்டம்:** புத்தூரைச் சேர்ந்த சுவாமிநாதன் மகள் பத்மாவதி. 14 வயதுடைய பத்மாவதி கடந்த ஏப்ரல் 27ம் தேதியிலிருந்து காணவில்லை. இவரை அப்பகுதியைச் சேர்ந்த பாரத் என்பவர் முன் விரோதம் காரணமாகக் கடத்திவிட்டதாக போலீசிலி புகார். வழக்கப் பதிவு, விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 45. | 10.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை அருகே உள்ள கடையன்பட்டி மக்கள். கடையன் பட்டியில் உள்ள காளியம்மன் கோவில் திருவிழாவின்போது ஊர் சார்பில் கோவில் பூசாரியைத் தேர்வு செய்வதில் இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. இதில் போஸ் என்பவருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. இது பற்றி காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். இந்தப் புகாரைக் காவலர்கள் ஏற்க மறுத்துள்ளனர். இதனால் மக்கள் காவல் நிலையத்தில் முற்றுகை. | கோஷ்டி மோதல். | தமிழ் சுடர் |
| 46. | 10.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை தாலுகா, கீழ்க்கண்டனி, மு. மணக்கரை கிராமத்தைச் சேர்ந்த ராமேஸ்வரி. தலித் மாணவியான ராமேஸ்வரி கல்விக் கடன் கேட்டு இரண்டு ஆண்டுகளாக வங்கிக்கு நடந்தும் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் பரிந்துரைக் கடிதம் பெற்று, சமர்ப்பித்தும் கூட ராமேஸ்வரிக்கு தமிழ் நாடு மெர்க்கண்டைல் வங்கி மறுத்துவிட்டது. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 47. | 10.06.2009 | **திருப்பூர் மாவட்டம்:** எழிச்சி பாளையம் அம்பேத்கார் காலனியைச் சேர்ந்த முருகேசன். தலித் சமூகத்தைச் சேர்ந்த முருகேசனை அப்பகுதியைச் சேர்ந்தவர் அவரது வீட்டை விட்டு வெளியேறும்படி மிரட்டி வருகின்றனர். இது பற்றி கலெக்டரிடம் புகார். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | |
| 48. | 11.06.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி செக்கணூரணி சரகத்திற்கு உட்பட்ட புளியங்குளத்தைச் சேர்ந்த பாண்டி மனைவி ரேவதி. ரேவதியைத் தனது கணவர் குடும்பத்தார் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்துள்ளார். இதனால் மனமுடைந்த ரேவதி விஷம் குடித்துத் தற்கொலை. இது பற்றிப் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை, வரதட்சணைக் கொடுமை | தினமணி |
| 49. | 11.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே உள்ள குவாணம்பட்டியைச் சேர்ந்த கணேஷ் | லஞ்சம் | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாண்டி. தற்காலிகக் தபால் துறை ஊழியராக இருந்த கணேஷ் பாண்டியன் பணி நிரந்தரம் கோரி சிவகாசி துணைக் கோட்ட அஞ்சல் கருணாகரனிடம் மனுச் செய்துள்ளார். அப்பொழுது அதிகாரி கருணாகரன் 5,000 லஞ்சமாகக் கேட்டுள்ளார். இது பற்றி கணேஷ் பாண்டியன் போலீசிடம் புகார். வழக்குப் பதிவு செய்து விசாரணை. | | |
| 50. | 11.06.2009 | **சென்னை மாவட்டம்:** கொருக்குப் பேட்டை நாவல் தெருவைச் சேர்ந்தவர் வெல்டிங் குமார். வெல்டிங் குமார் பல்வேறு கொலை, கொலை முயற்சி பற்றி 20க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகளுக்காகக் கடந்த 14 வருட காலமாக சிறைச்சாலையில் இருந்துள்ளார். சிறைத்தண்டனை முடிந்து ஜூலை 2009 விடுதலையாக உள்ள நிலையில் சிறைச்சாலைக் கைதிகளுக்கிடையே ஏற்பட்டு மோதலில் இவரைக் குத்திக் கொலை செய்துள்ளனர். | சிறைச்சாலை வன்முறை. கொலை | தினமணி |
| 51. | 11.06.2009 | **மதுரை மாவட்டம்:** ஜவகர்புரத்தில் உள்ள கணேசபுரத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகள் வளர்மதி. வளர்மதி அப்பகுதியைச் சேர்ந்த ஈஸ்வரன் என்பவரைக் காதலித்து வந்துள்ளார். இவர் காதலிப்பதை செல்வராஜ் எதிர்த்துள்ளார். இதனால் மனமுடைந்தவர் விஷம் குடித்துத் தற்கொலை. அது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. தற்கொலை | தீக்கதிர் |
| 52. | 11.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** கரிக்காலி கிராமம் கண்ணுமேய்க்கிபட்டி பெருமாள் மகள் தனலட்சுமி தனலட்சுமியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் வரதட்சணை கேட்டுக் கொடுமைப்படுத்தி, கொலை செய்துள்ளனர். இது பற்றி பெருமாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 4 மாதங்களாகியும் எந்த நடவடிக்கையும் இல்லை என்று பெருமாள் சட்டமன்ற உறுப்பினரிடம் புகார் அளித்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை, காவல் நிலைய வன்முறை. | தீக்கதிர் |
| 53. | 11.06.2009 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே ஆரியப்பன்பட்டியைச் சேர்ந்த முத்து மகாலிங்கம் மனைவி பிரியா. பிரியாவுக்கும் மகாலிங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினையில் மனமுடைந்த பிரியா மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குளித்தார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 54. | 12.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** கன்னிசேரியைச் சேர்ந்த புஷ்பராஜ் மகன் சிமியோன் (12), பீட்டர் மகன் அந்தோனிராஜ். தலித் சமூகத்தைச் சேர்ந்த சிமியோன் மற்றும் அந்தோனிராஜ் கன்னேசேரிப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுண்ணாம்புக் காளவாசலில் இருவரும் மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளனர். இது பற்றிப் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 55. | 12.06.2009 | **தர்மபுரி மாவட்டம்:** பாப்பிரெட்டிப்பட்டி கொக்கைரைப் பேட்டையைச் சேர்ந்த பத்மாவதி. பத்மாவதியை அவரது கணவர் குடும்பத்தார் வரதட்சணை கேட்டுக் கொடுமைப்–படுத்தியுள்ளார்கள். இதனால் மனமுடைந்த பத்மாவதி தன் குழந்தைகளுடன் தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை. தற்கொலை | தி ஹிந்து |
| 56. | 12.06.2009 | **தேனி மாவட்டம்:** கோம்பையைச் சேர்ந்த ராஜு மகன் ராஜேந்திரன். ராஜேந்திரன் கடந்த சில நாட்களுக்கு முன் கஞ்சா வழக்கில் கைது செய்யப்பட்டு மத்திய சிறையில் விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்தார். மயங்கிவிழுந்து உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை | சிறைச்சாலை வன்முறை | தினமணி |
| 57. | 12.06.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டியைச் சேர்ந்தவர் முனியாண்டி மனைவி பேச்சி. பேச்சியம்மா பிரசவத்திற்காக நேற்று முன்தினம் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் குழந்தையை அனாதையாக மருத்துவமனையில் போட்டுவிட்டு இருவரும் தலைமறைவானார்கள். இது பற்றிப் போலீசார் விசாரணை. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 58. | 12.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** சின்னாளப்பட்டி தேவாங்கர் மேல் நிலைப் பள்ளி மாணவர் நாகராஜ். 7ம் வகுப்பு மாணவர் நாகராஜ் தச்சுவேலை வகுப்பிற்குத் தாமதமாகச் சென்றதால் ஆசிரியர் சேகரன் அடித்துள்ளார். இதில் காயமடைந்த நாகராஜ் மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 59. | 12.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** நான்குநேரி தாலுகா, திருவட்டார்புரம் கிராமத்தைச் சேர்ந்த மனித உரிமைக்கான குடிமகக்ள் இயக்க உறுப்பினர் மாரியம்மாள் என்பவரை அப்பகுதியைச் சேர்ந்த மைக்கேல் என்பவர் இழிவுபடுத்தித் தாக்குதல். காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை இல்லை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | எஸ். கணேசன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 60. | 12.6.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** ஆனந்த நகர் பகுதியில் 4 கூரை வீடுகளில் காவலர் முருகேசன் என்பவர் தீ வைத்துக் கொளுத்தி விட்டு ஏழை மக்களிடம் தகராறு. | காவல் நிலையச் சித்திரவதை | எஸ். கணேசன் |
| 61. | 13.6.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** செம்பட்டி போலீஸ் சரகம் முத்தையாகவுண்டன்பட்டியைச் சேர்ந்த சுந்தரம் மகள் ரம்யா. ரம்யா செம்பட்டி அருகே உள்ள காமுபள்ளிச் சத்திரம் அரசு கள்ளர் மேல் நிலைப் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்தார். ரம்யாவை அவரது சக மாணவர் சரவணன் கேலி செய்து வந்துள்ளார். இது குறித்து ரம்யா பள்ளி நிர்வாகத்திடம் புகார் செய்துள்ளார். பள்ளி சரவணனை சஸ்பெண்ட் செய்துள்ளது. இந்நிலையில் வீட்டில் இருந்த சரவணன் தொடர்ந்து ரம்யாவைக் கேலி செய்ததால் மனமுடைந்த ரம்யா விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். | ஈவ் டீசிங். பெண்களுக்கு எதிரான வன்முறை.. | |
| 62. | 13.6.2009 | **தேனி மாவட்டம்:** கம்பம் பகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் கே. கே. பட்டி தங்கம்.<br>கம்பம் பகுதியில் சுற்றுப்புறக் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொது மக்கள் சிகிச்சைக்காகக் கம்பம் அரசு மருத்தவமனையில் செல்லும் பொழுது அங்குள்ள மருத்துவர்களும் செவிலியர்களும் சாதாரண சிகிச்சை கூடத் தராமல் தேனி மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். இந்நிலையில் கடந்த 5ம் தேதி பிரசவத்திற்காக 3 பெண்கள் அனுமிக்கப்பட்டனர். ஆனால் மருத்துவர்கள் தேனி மருத்துவமனைக்குச் செல்லுமாறு கூறியுள்ளார். | மருத்துவமனை அலட்சியம் | ஜனசனக்தி |
| 63. | 13.6.2009 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே மேட்டு நீரேத்தான் கிராமத்தைச் சேர்ந்த அழகர்சாமி மனைவி சரஸ்வதி<br>பொதுப்பணித்துறை ஊழியரான அழகர்சாமி இறந்துவிட்டார். அவருக்கான பென்சன் நிலுவைத் தொகை பெற மனைவி சரஸ்வதி விண்ணப்பித்திருந்தார். இதற்காக சார்பு நிலைக் கருவூலத்தில் கருவூல அதிகாரி ராமச்சந்திரன் ரூபாய் 1,500/- லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி சரஸ்வதி போலீசில் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 64. | 13.6.2009 | **சென்னை மாவட்டம்:** விருகம்பாக்கத்தைச் சேர்ந்த அன்பரசன். அன்பரசனுக்கு பொருளாதார நெருக்கடியால் நஷ்டம் | லஞ்சம், காவல் நிலையச் சித்திரவதை. | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடைந்தார். கண்ணன் என்பவர் அன்பரசன் மூலம் ஷேர் மார்க்கெட்டில் ரூ. 1.5 லட்சம் வரை முதலீடு செய்து நஷ்டம் அடைந்தார். இதனால் நஷ்டம் அடைந்த ரூபாய் கண்ணன் என்பவரிடம் கேட்டள்ளார். மேலும் அன்பரசனைக் கடத்தி அவரது வங்கியில் உள்ள பணத்தை எடுத்துக் கொண்டார். இது பற்றி அன்பரசன் போலீசில் புகார் செய்தார். புகாரைப் பெற்ற இன்ஸ்பெக்டர் மனோகரன் கண்ணன் மீது நடவடிக்கை எடுக்க ரூ.25,000/– லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி லஞ்ச ஒழிப்புத் துறையிடம் புகார். | | |
| 65. | 13.6.2009 | **ஈரோடு மாவட்டம்:** சோலார் நகராட்சி நகரைச் சேர்ந்தவர் தங்கமுத்துமகள் கலைச் செல்வி (எ) உமா மகேஸ்வரி. உமா மகேஸ்வரிக்கும் இவரது அத்தை மகன் மலையாளனுக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர். இந்நிலையில் உமா மகேஸ்வரி மர்மமான முறையில் இறந்து கிடந்துள்ளார். இது பற்றி தங்கமுத்து போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 66. | 14.06.2009 | **மதுரை மாவட்டம்:** கரிமேடு பகுதியில் உள்ள மக்கள்: கரிமேடு பகுதியில் நடந்த திருவிழாவில் சர்ச்சப்பர் பவனியின்போது இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. தகராறில் ஈடுபட்டவர்களைக் கலைக்க போலீசார் தடியடி நடத்தினர். | காவல் நிலையச் சித்திரவதை. | தமிழ் முரசு |
| 67. | 14.06.2009 | **மதுரை மாவட்டம்:** குருவித்துறையைச் சேர்ந்தவர் சுப்பிரமணி மகள் அமுதப்பிரியா. அமுதப்பிரியாவுக்கும் சிவலிங்க மூர்த்திக்கும் சில ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இந்நிலையில் கருத்து வேறுபாடு காரணமாகக் கடந்த 2 வருடங்களாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர். சிவலிங்கம், அமுதப்பிரியா குடும்பம் நடத்த அழைத்துள்ளார். அமுதப்பிரியா மறுத்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சிவலிங்கம் அரிவாளால் மனைவி, மாமனார், மாமியாரை வெட்டியுள்ளார். இது பற்றிப் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஜனசக்தி |
| 68. | 14.06.2009 | **மதுரை மாவட்டம்:** எஸ்.ஆர். தெருவைச் சேர்ந்த சந்திரசேகரன் மகள் சங்கீதா. சங்கீதாவை ஜெயப்பிரகாஷ் ஆகியோருக்குக் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடைபெற்றது. இந்நிலையில் ஜெயப்பிரகாஷ் சங்கீதாவிடம் வரதட்சணை கேட்டுக் | பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுமைப் படுத்தியுள்ளார். இந்நிலையில் மனமுடைந்த சங்கீதா மண்ணெண்ணெய் ஊற்றித் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி சந்திர சேகரன் போலீசில் புகார். | | |
| 69. | 14.06.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** பூபாலபுரம் ஹவுசிங் போர்டு காலனியைச் சேர்ந்த கண்ணன் மனைவி தேன்மொழி. கண்ணன் தன் முதல் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு தேன்மொழி என்று பெண்ணுடன் 2வது திருமணம் செய்துகொண்டார். இந்நிலையில் முதல் மனைவியின் குழந்தைகள் கண்ணனைப் பார்க்க அடிக்கடி வந்து சென்றதால் தேன்மொழிக்கும் கண்ணனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த கண்ணன் கத்தியால் குத்தியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்குப் பதிவு செய்த விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்மறை | தீக்கதிர் |
| 70. | 14.06.2009 | **சென்னை மாவட்டம்:** மின்சார இணைப்பு ர துணைப் பொறியாளர் ரூ.5,000 லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | லஞ்சம்ள | The Hindu |
| 71. | 15.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஆத்தூர் அருகேவுள்ள சொக்கலிங்கபுரத்தைச் சேர்ந்த பஞ்சிராஜ் மனைவி மலர்விழி. மலர்விழியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்து கொலை செய்துள்ளனர். இது பற்றி மலர்விழி தந்தை முருகன் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை. கொலை | தினமலர் |
| 72. | 15.06.2009 | **மதுரை மாவட்டம்:** செல்லூர் அந்தோனியார் கோவில் முதல் தெருவைச் சேர்ந்த சுகுமார் மனைவி காளீஸ்வரி. சுகுமாருக்கும் காளீஸ்வரிக்கும் திருமணம் முடிந்து இரண்டு ஆண்டுகள்ஆன நிலையில் சுகுமாருக்குச் சொந்த ஆட்டோ வாங்க காளீஸ்வரி ஆசைப்பட்டார். ஆனால் பணமில்லாமல் வருத்தப்பட்ட காளீஸ்வரி மண்ணெண்ணெய் ஊற்றித் தீவைத்துக் கொண்டார். இது பற்றிப் போலீசில் புகார். வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 73. | 16.06.2009 | **ராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி தாலுகா கவுசில் சிந்தாலியா. திருணம் ஆன கவுசில் சிந்தாரியா அப்துல் மகன் கடத்தியுள்ளார். | பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை.. | |
| 74. | 16.06.2009 | **ராமநாதபுரம் மாவட்டம்:** தங்கச்சிமடம் சாந்திநகர், மீனவர் மாரிமுத்து மனைவி சாந்தி தேவி. சாந்தி தேவி தனியாக இருந்தவரிடம் | | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அப்பகுதியைச் சேர்ந்த களஞ்சியம் என்பவர் பாலியல் | | |
| 75. | 16.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** வேம்பத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் முருகன். தலித் சமூகத்தைச் சேர்ந்த முருகன் பொதுக்குழாயில் தண்ணீர் பிடித்தாகத் தகராறு செய்து கத்தியால் குத்தியுள்ளார். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | |
| 76. | 16.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** எடிவகால் த.பெ. நாகலிங்கம், வெட்டி வளவு. எடிவகால் பக்கத்து ஊரைச் சேர்ந்த முருகானந்தம் ராமசுப்பு பெண்ணைக் கேலி செய்துள்ளார். இது பற்றிப் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை.. | |
| 77. | 16.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி நகரைச் சேர்ந்த முத்துலட்சுமி. முத்துலட்சுமிக்கும் மதுரையைச் சேர்ந்த முருகபாண்டிக்கும் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றுள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டாகக் குடும்பப் பிரச்சினை காரணமாகப் பிரிந்து தனது தாயுடன் வாழ்ந்து வந்தார். இந்நிலையில் முருகபாண்டி அடிக்கடி தனது மனைவியைக் குடும்பம் நடத்த அழைத்துள்ளார். ஆனால் முத்துலட்சுமி வர மறுத்துள்ளார். வீட்டில் தனியாக இருந்தபோது பெட்ரோல் ஊற்றித் தீ வைத்து எரித்துக் கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 78. | 16.06.2009 | **சென்னை மாவட்டம்:** புளியந்தோப்பு அம்பேத்கார் நகரைச் சேர்ந்த சலிம் ஷேக் துனித் மகள் யாஸ்மின் (15). யாஸ்மின் அப்பகுதியைச் சேர்ந்த இஸ்மாயிலைக் காதலித்துள்ளார். இதனால் யாஸ்மின் தந்தை கண்டித்ததுடன் அடித்துள்ளார். இந்நிலையில் யாசிமின் காதலன் இஸ்மாயில் உடன் வீட்டை விட்டு வெளியேறினார். துனித் மகளை கண்டித்து வீட்டிற்கு அழைத்து வந்து கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். இது பற்றிப் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 79. | 16.06.2009 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை அருகே உள்ள காளிகாப்பான் ஊரைச் சேர்ந்த அய்யனார் மனைவி நாகரத்தினம். நாகரத்தினம் வீட்டில் தனியாக இருந்தபோது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்துக் கொண்டார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 80. | 16.06.2009 | **மதுரை மாவட்டம்:** கொண்டையம்பட்டி ஊராட்சியில் உள்ள அரசு துவக்கப் பள்ளி பகலில் பள்ளிக்கூடமாகவும் இரவில் கழிப்பிடமாகவும் செயல்படுகிறது. இது பற்றி அப்பகுதி மக்கள் புகார். | பள்ளியில் சுகாதாரக்கேடு | தினமலர் |
| 81. | 16.06.2009 | **மதுரை மாவட்டம்:** சோழவந்தான் அருகே உள்ள தேனூர் கிராமத்தைச் சேர்ந்த ஜலாலுதீன் மகள் சித்திக் ஆயிஷா. ஜலாலுதீன் காமராஜர் நடுநிலைப் பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வந்தவர். திடீரெனப் பள்ளிக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை. இது பற்றி ஜலாலுதீன் போலீசில் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 82. | 16.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** வேடசந்தூர் வட்டம், வி. புதுக்கோட்டையில் உள்ள ராஜன் ஸ்பின்னிங் மில் தொழிலாளர்கள். ஸ்பின்னிங் மில்லில் சுமங்கலி திட்டத்தின் கீழ் வேலை பார்த்து வழங்கப்பட்ட செக்கில் பணம் இல்லாமல் திரும்ப வந்துள்ளது. செக் மோசடி செய்த மில் நிர்வாகத்தின் மீது பாதிக்கப்பட்ட பெண்கள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்துள்ளனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 83. | 16.06.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** தாளமுத்து நகர் எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த சிவபெருமாள் மனைவி பாக்கியலட்சுமி. சிவபெருமாளுக்கும், பாக்கியலட்சுமிக்கும் இடையே ஏற்பட்ட குடும்பப் பிரச்சினையால் இருவரும் தனித்தனியே பிரிந்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் மனமுடைந்த பாக்கியலட்சுமி மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்துக் கொண்டார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 84. | 17.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** கல்லல் போலீஸ் எல்லைக்குட்பட்ட செவவராங்கோட்டையைச் சேர்ந்த கருப்பையா மனைவி சாந்தியை சாந்து அவரது கணவர் ஏற்க மறுப்பு. மேலும் சாந்தியை அடித்துச் சித்திரவதை | பெண்களுக்கு எதிரான வன்முறை.. | ஒ. ஆனந்த குமார் |
| 85. | 17.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி தாலுகா பசீர் முகமது, த.பெ. ராவுத்தர். பசீர் அகமது ஜபர்லாலுகான் அகமது உசேன் ஜாஸ் பேகம் மற்றும் 2 பெயரை அடித்துச் சித்திரவதை. போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஒ. ஆனந்த குமார் |
| 86. | 17.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி போலீஸ் எல்லைக்குட்பட்ட சித்துராணி கிராமத்தைச் சேர்ந்த உடையான் மகள் தமிழ் செல்வி. அப்பகுதியைச் சேர்ந்த சுரேஷ் காதலித்து திருமணம் செய்வதாகக் கூறி ஏமாற்றியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை.. | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 87. | 17.06.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சபரியார் கோவில் தெரு தமிழ் செல்வம் மனைவி மஞ்சுளா. மஞ்சுளாவை அவரது கணவர் அரசு பணியாளரான ராமசாமி வரதட்சணை சேட்டு அடித்துச் சித்திரவதை. இது பற்றி போலீசில் புகார். வழக்குப் பதிவு. விசாரணை | பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை | ஓ. ஆனந்த குமார் |
| 88. | 17.06.2009 | **தேனி மாவட்டம்:** சேர்மன் ரத்தினம் நகரில் வசிக்கும் முருகன் செல்வி மகள் சிநேகா (8/09). சிநேகா கடந்த 11ம் தேதி சுக்குவாடன்பட்டிக்கு கோவில் திருவிழவுக்காகப் பாட்டி வீட்டுக்குச் சென்றிருந்தார். அன்று இரவு நடந்த நிகழ்ச்சியில் பங்குபெற்ற சிநேகா வீடு திரும்பவில்லை. இது பற்றிப் போலீசில் புகார் செய்திருந்தனர். இந்நிலையில் சிநோகா கொலை செய்யப்பட்டு ஒரு குடோனில் வீசப்பட்டுள்ளார். இது பற்றி போலிசார் விசாரணை. | சிறுமி கொலை | தினகரன் |
| 89. | 17.06.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வரம் மீனவர்கள் கச்சத்தீவு அருகே கடலுக்குள் சென்ற 700 படகுகளில் 50 படகுகளை இலங்கைக் கடற்படையினர் வழிமறித்துத் தாக்கி படகுகளை வீழ்த்தியுள்ளனர். இதில் 4 மீனவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். | மீனவர்கள் மீது வன்முறை | தினகரன் |
| 90. | 17.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே திருத்தங்கலில் எஸ்.ஆர். அரசு மேல்நிலைப் பள்ளி. அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்க தலா ரூ.50/– வாங்கிய பற்றி நிர்வாகத்தின் மீது லஞ்சப் போலீசில் புகார். | லஞ்சம். வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 91. | 17.06.2009 | **சென்னை மாவட்டம்:** புது வண்ணாரப்பேட்டை, கீரைத் தோட்டத்தைச் சேர்ந்த ரமேஷ் லலிதா மகன் கார்த்திக். கார்த்திக் தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தான். விளையாட்டில் ஆர்வம் கொண்டவர் பள்ளியில் கால் பந்து வந்து விளையாடிக் கொண்டிருந்த பொழுது கோல் போஸ்ட் விழுந்ததில் கார்த்திக் உயிரிழந்தார். இதுபற்றி போலீசார் விசாரணை. | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 92. | 17.06.2009 | **திருவள்ளூர் மாவட்டம்:** கல்லுப்பாக்கம் அருகே உள்ள மேல்வசிவராயநல்லூரைச் சேர்ந்த தர்மராஜ் மகள் கணேஷ் (13). 13 வயதுடைய கணேஷ், அரசினர் பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தார். இவர் நேற்று முன்தினம் பள்ளிக்கு செந்ன கணேஷ் காலை | வகுப்பறை வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | 11.30 மணிக்கு வகுப்பறையில் இருந்து வெளியேறியவர் வகுப்பறைக்குத் திரும்பவில்லை. இந்நிலையில் பள்ளியின் பின்புறமுள்ள கிணற்றில் பிணமாக மிதந்துள்ளார். இது பற்றிப் போலீசார் விசாரணை. | | |
| 93. | 17.06.2009 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி, சோழவந்தான், மேலக்கால் கிராமத்தில் தேசீய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் குளம் தூர் வாரும் பணி நடந்து வருகிறது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் வேலை செய்கின்றனர். வேலை செய்தவர்களுக்கு ரூ. 45 வழங்கப்படாததால் மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். | லஞ்சம் | தினகரன் |
| 94. | 17.06.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி, வேப்பனூத்தைச் சேர்ந்த போதை ராஜா. போதை ராஜா வேப்பனூத்துப் பஞ்சாயத்துத் தலைவராக உள்ளார். இவர் அரசு கலர் டி.வி. வாங்கித் தருவதாகப் பலரிடம் ரூ. 100 வசூல் செய்துள்ளதாகச் செல்லம்பட்டி திமுக ஒன்றியச் செயலாளர் உக்கிரபாண்டி சிந்துபட்டி போலீசில் புகார். | லஞ்சம் | தினகரன் |
| 95. | 17.06.2009 | **மதுரை மாவட்டம்:** நிலையூர் தெற்குத் தெருவைச் சேர்ந்த சந்திரன் மனைவி விஜயராணி. விஜயராணிக்கும் அப்பகுதியைச் சார்ந்த செல்வத்திற்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் விஜயராணி வழிமறித்து செல்வம் தகராறு செய்தார். மேலும் சேலையைப் பிடித்து மானபங்கம் செய்ய முயற்சி. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 96. | 17.06.2009 | **மதுரை மாவட்டம்:** பெரிய ஆலங்குளத்தைச் சேர்ந்தவர் மலர் (19/09). மலர் அப்பகுதியைச் சேர்ந்த வைரமணியைக் காதலித்துள்ளார். திருமண ஆசைகாட்டி மலரைப் பலமுறை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனால் மலர் வைரமணியிடம் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தியுள்ளார். ஆனால் வைரமணி திருணம் செய்ய மறுப்பு. இது பற்றி மலர் போலிசில் புகார். | பெண்களுக்கு எதிரான பாலியல் வன்மறை | தினமலர் |
| 97. | 17.06.2009 | **சென்னை மாவட்டம்:** மாயக்கிருஷ்ணன் விபத்து இழப்பீட்டுத் தொகையாக ரூ. 3,25,000 வழங்க வேண்டும் என யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்குக் கோர்ட் உத்தரவிட்டது. இதனைப் பெற கிராமத்தில் உள்ள அலுவலகத்திற்குச் சென்றபோது கிளை | லஞ்சம் | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலாளர் ரூ. 3,000 லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | | |
| 98. | 17.06.2009 | **கோவை மாவட்டம்:** உடுமலை. இராமநாதபுரத்திலிருந்து உடுமலை வழியாகக் கேரளாவுக்குக் கடத்தவிருந்த 120 மூடை ரேசன் அரசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. | ரேசன் அரசி கடத்தல் | தினமலர் |
| 99. | 17.06.2009 | **திருச்சி மாவட்டம்:** தெற்குக் காட்டூரைச் சேர்ந்தவர் ராஜீவ் காந்தி. ராஜீவ் காந்தியின் பயிற்சி மதிப்பீடு சான்றிதழ் வழங்குவதற்கு ரூ. 1,000 லஞ்சம் கேட்டுள்ளார். பள்ளித் தலைமை ஆசிரியர் இது பற்றிப் போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | ஜனசக்தி |
| 100. | 17.06.2009 | **மதுரை மாவட்டம்:** நாகமலைப் புதுக்கோட்டையைச் சேர்ந்த சவுந்தரபாண்டியன். சவுந்தரபாண்டியன் ரெயில்வேயில் கணக்குத் துறை அதிகாரியாக வேலை செய்தவர். 1999ல் ஓய்வு பெற்றார். எல்.ஐ.சி. அதிகாரியைத் தாக்கியதாக இவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இதில் FIR நகலில் பதிவு எண் அழிந்துவிட்டதால் இதைக் கேட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் FIR பதிவு எண்ணைக் கேட்டு விண்ணப்பித்திருந்தார். அதற்கான தகவலைப் போலீஸ் சுப்பிரண்டு அளிக்க மறுத்துவிட்டதால் தகவல் உரிமை ஆணையம் ரூ. 25,000 அபராதம் அளித்துள்ளது. | காவல் நிலையச் சித்திரவதை | மாலை மலர் |
| 101. | 17.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** என்.ஆர். நாயுடு நினைவு மேல்நிலைப் பள்ளியில் +2 மாணவ, மாணவிகளுக்கு டி.சி. வழங்க ரூபாய் 50 வீதம் வசூலித்துள்ளனர். இது பற்றி போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | மாலை மலர் |
| 102. | 17.06.2009 | **நாமக்கல் மாவட்டம்:** எருமப்பட்டியில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர் உதயகுமார். 10ம் வகுப்பு முடித்த மாணவரை +1ம் வகுப்பில் சேர அதிக கட்டணம் வசூலித்தனர். இது பற்றி சி.இ.ஓவிடம் புகார். | வகுப்பறை வன்முறை | மாலை மலர் |
| 103. | 17.06.2009 | **திருவாரூர் மாவட்டம்:** பள்ளிகள், கல்லூரிகளில் கட்டணக் கொள்ளையை எதிர்த்து இந்திய மாணவர் சமூகத்தினர் போராட்டக் களத்தில் இறங்கினர். இதற்காக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கச் சென்றபோது காவலர்கள் தடுத்து நிறுத்தினர். அதையும் மீறி மாணவர்கள் சென்றதால் தாக்கியுள்ளனர். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 104. | 17.06.2009 | **தேனி மாவட்டம்:** பா.ம.க. தேனி மருத்துவ அணிச் செயலாளர் சேக் அப்துல்லா மகள் அஜிதா. அஜித்தாவை 3ம் வகுப்பில் சேர்க்க ஷேக் அப்துல்லா தேனி சரஸ்வதி நாடார் பள்ளியில் சென்று தலைமை ஆசிரியரைச் சந்தித்தபோது தலைமை ஆசிரியர் சீட் கொடுக்க மறுத்துவிட்டார். இதனால் ஷேக் அப்துல்லாவுக்கும் தலைமை ஆசிரியருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அஜிதாவின் டிசியைத் தலைமை ஆசிரியர் கிழித்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 105. | 17.06.2009 | **கரூர் மாவட்டம்:** தோகைமலை அருகில் உள்ள தூக்காம்பட்டியைச் சேர்ந்தவர் சங்கர் மகள் புஷ்பா (16). புஷ்பா அப்பகுதியைச் சேர்ந்த ராஜேஷ் என்பவரைக் காதலித்துள்ளார். இதனை சங்கர் எதிர்த்துள்ளார். இதனால் மனமுடைந்த புஷ்பா தற்கொலை செய்துகொண்டார். இது பற்றிப் போலிசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 106. | 18.06.2009 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாவட்டத்தில் உள்ள பல்வேறு ரேசன் கடைகளில் திடீர் ஆய்வு செய்தபோது பல ரேசன் கடைகள் பணி நேரத்தில் மூடப்பட்டிருந்தது. இதனால் தொடர்ந்து சம்மந்தப்பட்ட ஊழியர்களை உடனடி சஸ்பெண்ட் செய்துள்ளனர். | ரேசன் கடை ஊழல் | தினத்தந்தி |
| 107. | 18.06.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனியை அடுத்த கொந்தையத்தைச் சேர்ந்த அனந்தன் வள்ளியத்தான் மகன் சதிஸ்குமார். சதீஸ் குமார் +2 வகுப்பில் கல்வித் துறையிடம் மறு கூட்டலுக்கு விண்ணப்பித்ததற்கு அவருக்கு வழங்கிய நகலில் வேறு மாணவர் கையெழுத்து இருந்ததால் மாணவர் அதிர்ச்சி அடைந்தார். இது பற்றி மாணவர் கல்வி கேள்விக் குறியாக உள்ளது. | கல்வித்துறை ஊழல் | தினமலர் |
| 108. | 18.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** தெற்கு பனவடலி சத்திரத்தைச் சேர்ந்த மோகன் மனைவி சண்முகத்தாய். சண்முகத்தாய்க்குப் பிறந்த 45 நாட்களே ஆன ஆண் குழந்தைக்கு வள்ளிக்–கோனேந்தல் ஆரம்ப சுகாதார மையத்தில் தடுப்பூசி போட்டனர். குழந்தைக்கு ஊசி குத்திய இடத்தில் இருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இந்நிலையில் நெல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குழந்தை உயிரிழந்தது. | மருத்தவமனை அலட்சியம், குழந்தை சாவு. | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 109. | 18.06.2009 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த மாடசாமி மகன் மணிமாறன். மணிமாறன் கூத்தியார் குண்டு பகுதியில் உள்ள கல்லூரியில் முதலாம் ஆண்டு சேர்ந்துள்ளார். இவரை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 15 பேர் ராக்கிங் செய்து சரமாரியாகத் தாக்கிக் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் காயமடைந்த மணி மாறன் அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | ராக்கிங் | தமிழ் முரசு |
| 110. | 18.06.2009 | **மதுரை மாவட்டம்:** அய்யர் பங்களாவைச் சேர்ந்த தீபா. தீபாவிடம் அவரது கணவர், மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணை கேட்டு சித்திரவதை. இது குறித்து போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வரதட்சணை வன்கொடுமை | தமிழ் முரசு |
| 111. | 18.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** மடப்புரம் எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த கருப்புசாமி மகள் தனலட்சுமி. 16 வயதுடைய தனலட்சுமி தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டு இருந்தார். பணிக்குக் சென்று திரும்பும்பொழுது அப்பகுதியைச் சேர்ந்த மலைராஜ் தனலட்சுமியைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. இதனால் அவமானம் தாங்க முடியாமல் மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குளித்து இறந்தார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை | தமிழ் மரசு |
| 112. | 18.06.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் கைலாஸ் கார்டனைச் சேர்ந்தவர் தியாகு. இவர் நெல்லை திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுப் போலீசில் ஏட்டாகப் பணியாற்றி வருகிறார். இவர் வீடியோ கடைகளில் பணம் வசூல் செய்துவிட்டுத் திருட்டு வீடியோக்களைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவதாகக் குமரி மாவட்ட லஞ்ச ஒழிப்புப் போலீசுக்குப் புகார் | லஞ்சம் | மாலை மலர் |
| 113. | 18.06.2009 | **மதுரை மாவட்டம்:** பெரிய ஆலங்குளத்தைச் சேர்ந்தவர் விஜயா. இவரை அப்பகுதியைச் சேர்ந்த வைரமணி காதலித்து திருமண ஆசைகாட்டி பாலியல் பலாத்காரம் செய்து தற்போது திருணம் செய்ய மறுப்பு. இது பற்றி போலிசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை | தினகரன் |
| 114. | 18.06.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** வாகைகுளம் தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் அதிகக் கட்டணம் வசூலிப்பதாகக் கூறி மாணவர்கள் தூத்துக்குடி–திருநெல்வேலி நெடுஞ்சாலையில் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். | கல்லூரி கட்டணக் கொள்ளை | தமிழ் சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 115. | 18.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் அருகே செட்டுரணிப் பட்டி என்ற சுப்பிரமணியபுரத்தைச் சேர்ந்த குமார் மனைவி சண்முகவள்ளி. குமாரக்கு அவரது மனைவியின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டது. இதனால் சண்முகவள்ளியைக் கொலை செய்து தோட்டத்தில் புதைத்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 116. | 18.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி, புதிய பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த நூறில் ஹிதாயா (28). நூறில் ஹிதயாவை இவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்ததோடு வீட்டை விட்டு வெளியேறும்படி மிரட்டி உள்ளனர். இது பற்றிப் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணைக் கொடுமை | தமிழ் சுடர் |
| 117. | 19.06.2009 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் அருகே பெருங்குடி போலீஸ் சரகம் கொசவன்குண்டு கிராமத்தைச் சேர்ந்த பாண்டி மகள் முத்துப் பேச்சி (20). முத்துப் பேச்சி கடந்த 2 நாட்களுக்கு முன்பு கிணற்றில் குளிக்கச் சென்றவர் பிணமாக மிதந்தார். அது பற்றிப் போலீசில் புகார். வழக்கு | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 118. | 19.06.2009 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரத்தைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மனைவி ராமக்காள். கோபாலகிருஷ்ணன் குடும்பத்தில் கடன் தொல்லையால் அவதிப்பட்டு வந்தனர். இதனால் மனமுடைந்த ராமக்காள் தீக்குளித்து தூக்குமாட்டித் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை. | கந்து வட்டிக் கொடுமை– தற்கொலை | தமிழ் முரசு |
| 119. | 19.06.2009 | **தேனி மாவட்டம்:** தேனியில் மக்கள் குறை தீர்க்கும் பிரிவில் பல கிராமங்களில் இன்னும் இரட்டை டம்ளர் முறை இருப்பதாகத் தமிழ் புலிகள் அமைப்பினர் கலெக்டரிடம் மனு கொடுத்தனர். | தலித்துகள் மீதான வன்முறை | தமிழ் சுடர் |
| 120. | 20.06.2009 | **திருப்பூர் மாவட்டம்:** காங்கேயம் அருகே ராமலிங்கபுரத்தைச் சேர்ந்த விவசாயி மோகன். மோகன் கடந்த 10 நாட்களுக்கு முன்பு இவரது தென்னந்தோப்பில் காங்கேயம் மதுவிலக்கு போலீசார் திடீர் சோதனை நடத்தினர். இதில் 30 மரங்களிலிருந்து கள் இறக்கப்பட்டது தெரிய வந்தது. உடனே எஸ்.ஆனந்தகுமார், மோகன் மீது வழக்கு பதிவு செய்தார். இவ்வழக்கில் சிறையில் அடைக்காமல் இறக்க ரூ. 10 ஆயிரம் | லஞ்சம். காவல் நிலையச் சித்திரவதை | தமிழ் முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி மோகன் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 121. | 20.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** கமண்டோ படையினரின் சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாளை மத்திய சிறையில் 500 ஆயுள் தண்டனை கைதிகள் திடீர் உண்ணாவிரதம் இருந்தனர். | சிறைச்சாலை வன்முறை | தமிழ் முரசு |
| 122. | 20.06.2009 | **மதுரை மாவட்டம்:** மேலவளவு அருகே வி.எஸ் நகரைச் சேர்ந்த அழகர்சாமி மனைவி பஞ்சு. பஞ்சுவின் நடத்தையில் சந்தேகம் கொண்ட கணவர் அடித்து சித்ரவதை செய்துள்ளார். இது பற்றி பஞ்சு போலீசுக்கு புகார். வழக்கு பதிவு செயது விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 123. | 20.06.2009 | **சென்னை மாவட்டம்:** பூந்தமில்லி அடுத்த நாசரத்பேட்டையில் போக்குவரத்து சோதனை சாவடி உள்ளது. இங்கு வெளி மாநிலங்களில் இருந்து வரும் லாரி மற்றும் வாகனங்களில் கூடுதலாக பணம் வசூல் செய்வதாக புகார். | லஞ்சம் | மாலைமலர் |
| 124. | 20.06.2009 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் சோழபாண்டியபுரத்தைச் சேர்ந்த சீனிவாசன் மனைவி சித்ரா. சித்ரா வீட்டில் சமையல் செய்துக் கொண்டிருந்த போது ஸ்டவ் வெடித்ததில் பலத்த காயமடைந்தார். புதுவை ஜிம்பர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் உயிரிழந்தார். இதில் இவரது பிரேதத்திற்கு பதிலாக மற்றொரு பெண்ணின் சடலம் கொடுத்தால் குழப்பம் ஏற்பட்டது. இந்நிலையில் மற்றொரு குடும்பத்தாரிடம் சித்ராவின் உடல் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இறுதி சடங்கு முடித்து எரித்து விட்டனர். | மருத்துவமனை அலட்சியம் | மாமலைமலர் |
| 125. | 20.06.2009 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டியை அடுத்த பாண்டியராஜபுரம் அரசு சர்க்கரை ஆலை மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள். மாணவர்களை தலைமை ஆசிரியர் கீழ்த்தரமாக நடத்துவதும், பெற்றோர்கள் வந்தால் தரக்குறைவாக நடத்துகிறார். மாணவிகளை ஒருமையில் அழைக்கிறார் என்றும் தரக்குறைவாக நடத்துவதாக மாணவர்கள் முதன்மை கல்வி அலுவலரிடம் புகார் அளித்துள்ளனர். | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 126. | 20.06.2009 | **திருப்பூர் மாவட்டம்:** உடுமலை வட்டார மக்களிடம் பல்வேறு வகையிலும் அட்டுழியும் | தலித் மற்றும் பழங்குடியினர் | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்து வரும் வனத்துறை அலுவலர்களை தடுத்து நிறுத்திட தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. | மீதான வன்முறை | |
| 127. | 21.06.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில், குளச்சல் காமராஜன் சாலையை சேர்ந்த செய்யது மகள் ரிபாயா. ரிபாயா 10ம் வகுப்பு படித்து விட்டு, வீட்டு உரிமையாளர் கண்ணன் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தார். அவரை கண்ணன் மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனை கண்ணன் மனைவி டாக்டர் அமுதா சிறைப்பிடித்து கர்ப்பத்தை கலைத்துள்ளார். இது பற்றி ரிபாயா போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமுரசு |
| 128. | 21.06.2009 | **திருப்பூர் மாவட்டம்:** தாராபுரம் , சின்ன–புத்தூர் கிராமம் பாப்பனூத்தைச் சேர்ந்தவர் செல்வராஜ் (25) மனைவி ஜோதிமணி. செல்வராஜ் ஜோதிமணியை காதலித்து திருமணம் செய்துள்ளார். இதனால் ஜோதிமணி பெற்றோருடன் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்ததுள்ளார். இரண்டு மாதங்களுக்கு முன்பு ஜோதிமணிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தையை பார்க்க வந்த ஜோதிமணியை வீட்டிற்கு அழைத்துள்ளனர். செல்வராஜ் அனுப்ப மறுத்து விட்டார். இதனால் மனமுடைந்த ஜோதிமணி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 129. | 22.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே உள்ள காக்கிவாடன்பட்டி ஜே.ஜே நகரைச் சேர்ந்த கூடலிங்கம் மகன் வேந்தகுமார் (13), சரவணக்குமார் (9). கூடலிங்கம் முதல் மனைவி அமிர்தவள்ளி இறந்தவுடன் இவரது தங்கை முனியம்மாளை இரண்டாவது திருமணம் செய்து கொண்டனர். இந்நிலையில் முனியம்மாளின் நடத்தையில் சந்தேகப்பட்டு அடிக்கடி சண்டை போட்டு கொண்டிருந்தார். இந்நிலையில் மனைவியை அரிவாளால் வெட்டி 2 குழந்தைகளையும் கிணற்றில் அமுக்கி கொலை செய்துள்ளார். இதில் முதல் மகன் தப்பித்து போலீசில் புகார் செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. கொலை | தமிழ் முரசு |
| 130. | 22.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** ஆசிரியர் கிருஸ்புனாமேரி மேல்மருவத்தூர் அரசு பள்ளியில் ஆசிரியராக பணியாற்றியுள்ளார். பணி நிரந்தரம் செய்ய அச்சிறுப்பாக்கத்தில் உள்ள உதவி தொடக்கக்கல்வி அலுவலர் ரீட்டா பெர்னாசிடம் அணுகியுள்ளார். இதற்கு ரூ. 50 | லஞ்சம் | தமிழ் முரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். குறைந்தது ரூ. 30 ஆயிரம் கொடுக்க வேண்டும் இல்லாவிட்டால் வேலையில் இருந்ரது டிஸ்மிஸ் பண்ணுவதாக மிரட்டியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | | |
| 131. | 22.06.2009 | **ராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி, முதுகுளத்தூர், கடலாடி ஆகிய தாலுகாவை சேர்ந்த கிராமங்கள். கடலாடி அருகே உள்ள 150 கிராமங்களில் குடிதண்ணீர் வசதி இல்லாததால் அப்பகுதி மாணவ, மாணவியர் குடங்களுடன் பள்ளிக்குச் சென்று வீடு திரும்பும் நிலை. மேலும் 40 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலை இன்று வரை புதுப்பிக்கப்படாததால் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். | வகுப்பறை வன்முறை | தமிழ் முரசு |
| 132. | 22.06.2009 | **மதுரை மாவட்டம்:** அனுப்பானடியைச் சேர்ந்த பாலாஜி வெங்கட்ராமன் மனைவி பரமேஸ்வரி (22). வெங்கட்ராமனுக்கும், பரமேஸ்வரிக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மனமுடைந்த பரமேஸ்வரி தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 133. | 22.06.2009 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை– துவரங்குறிச்சி மெயின்ரோடு கள்ளக்காம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி 8ம் வகுப்பு வரை மட்டுமே உள்ளது. இப்பள்ளியில் 20க்கும் மேற்பட்ட பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கின்றனர். 8ம் வகுப்பிற்கு மேல் படிக்க வேண்டும் என்றால் துவரங்குறிச்சி சென்று படிக்கும் நிலை. ஆனால் அதற்கு போதிய பஸ் வசதி இல்லை. ஆகையால் மாணவர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிட கோரி சாலை மறியல் செய்தனர். | வகுப்பறை வன்முறை | மாலைமலர் |
| 134. | 22.06.2009 | **கோவை மாவட்டம்:** ஆனைமலை அருகே உள்ள கரும்பாளையத்தைச் சேர்ந்த தங்கவேல் மகள் ராதா (20) இவரது சித்தப்பா மகள் பிரியா (18). இருவரும் கட்டிட வேலை செய்து வருகின்றனர். இவர்கள் தினமும் மினி பஸ்சில் சென்று வந்தனர். இந்நிலையில் மினிபஸ் டிரைவர், கண்டக்டருடன் நெருங்கி பழகினர். பின் இது காதலாக மாறியது. இந்நிலையில் இருவரும் திருமணம் செய்து கொள்ளும்படி கூறியுள்ளனர். ஆனால் டிரைவர் மற்றும் கண்டக்டர் காதலிக்கவில்லை என்று கூறியுள்ளனர். இதனால் மனமுடைந்த சகோதரிகள் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை. தற்கொலை | மாலைமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 135. | 22.06.2009 | **மதுரை மாவட்டம்:** அழகப்பன்நகர் அருகே உள்ள முத்துப்பட்டி காளியம்மன் தெருவைச் சேர்ந்த போஸ் மகன் லெட்சுமணன் (20) லெட்சுமணன் அப்பகுதியில் உள்ள செப்டிக் டேங்கில் தவறி விழுந்து விச வாயு தாக்கி உயிரிழந்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | விஷவாயு | தினமணி |
| 136. | 22.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே உள்ள திருத்தங்கல் நடுவப்பட்டியைச் சேர்ந்த ஈஸ்வரன் மனைவி கார்த்திஸ்வரி. இருவருக்கும் இடையே குடும்பத் தகராறு காரணமாக கார்த்திஸ்வரி தனியாக வாழ்ந்து வந்தார். இந்நிலையில் மனமுடைந்த கார்த்திஸ்வரி தனது 2 குழந்தைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 137. | 22.06.2009 | **கோவை மாவட்டம்:** பல்லடத்தைச் சேர்ந்த பாலாஜி மகள் கீர்த்தனாவுக்கு நான்கு மாத பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில் கீர்த்தனா உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இவர் தனது கைகுழந்தையை அனாதையாக வார்டில் விட்டுச் சென்று விட்டார். இது பற்றி போலிசில் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | |
| 138. | 22.06.2009 | **புதுச்சேரி மாநிலம்:** வம்பாகீரப்பாளையத்தில் உள்ள சின்னபட்டினம், பெரிய பட்டினம் மீனவ மக்கள். புதுவையில் மீனவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் வீடுகள் சூறையாடப்பட்டன. போலீசார் துப்பாக்கி சூடு நடத்தி மோதலில் ஈடுபட்டவர்களை விரட்டியடித்தனர். | காவல் நிலைய வன்முறை | தமிழ்சுடர் |
| 139. | 22.06.2009 | **ஈரோடு மாவட்டம்:** சித்தோடு அருகில் உள்ள பெருமாள்மலை பகுதியைச் சேர்ந்த தலித் மக்கள். பெருமாள்மலை பகுதியில் சுமார் 45 அருந்ததியர் மக்கள் வாழ்கின்றனர். இப்பகுதியில் நடந்த கோவில் திருவிழாவில் அருந்ததியர் மக்கள் செல்ல தடைவிதித்துள்ளனர். கோவில் திருவிழாவில் தீர்த்தம் வாங்க சென்ற பெண்ணை அவமானப்படுத்தியுள்ளனர். இதில் அப்பெண் தற்கொலை செய்து கொண்டார். இவ்வழக்கு SC/ST வழக்கின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை. | தலித்துகள் மீதான வன்முறை. தற்கொலை | The New Indian Express |
| 140. | 23.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புவனம் அருகே உள்ள கொத்தகுளத்தைச் சேர்ந்த கண்ணன் | பெண்களுக்கு எதிரான | தமிழ் முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனைவி வளர்மதி. கண்ணன் கடந்த ஓராண்டிற்கு முன்பு நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார். இதனால் மனமுடைந்தநிலையில் காணப்பட்ட வளர்மதி தனது குழந்தைகளுடன் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இதுபற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | வன்முறை | |
| **141.** | 23.06.2009 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** மயிலாடுதுறை அருகே உள்ள ஸ்ரீகந்தபுரம் குறுக்குரோடு பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் மகள் கண்மணி (15). கண்மணி நச்சம்பாடி அரசு பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். நேற்று காலை பள்ளி சென்ற கண்மணி வகுப்பறையில் மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதுபற்றி கண்மணி பெற்றோர் சாவில் மர்மம் இருப்பதாக போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | தமிழ் முரசு |
| **142.** | 23.06.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஸ்ரீவைகுண்டம் தாலுகா, செய்துங்கநல்லூர் சந்தையடி தெருவைச் சேர்ந்த சப்பானி என்பவரை செய்துங்கநல்லூர் காவலர் சேவியர் அடித்து சித்ரவதை. சப்பானி மருத்துவமனையில் அனுமதி. | காவல் நிலையச் சித்ரவதை. | S. கணேசன் |
| **143.** | 23.06.2009 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் போலீஸ் சரகத்திற்குட்பட்ட மேல அனுப்பானடியைச் சேர்ந்த நல்லுச்சாமி மகள் கார்த்திகாயினி. 17 வயதுடைய கார்த்திகாயினி அதே பகுதியில் உள்ள தனியார் மில்லில் வேலை செய்து வருகிறார். கடந்த 17ம் தேதி வேலைக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை. இது பற்றி பெற்றோர் போலீசில் புகார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| **144.** | 23.06.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே உள்ள பிரவியம்பட்டியைச் சேர்ந்த ரவிசந்திரன் மகள் 13 வயதுடைய சிறுமியை அவரது தாய்மாமனுக்கு கட்டாய திருமணம் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளது. இது பற்றி செக்காணுரனி, வாலாந்தூர் போலீசில் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இது பற்றி கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார். | குழந்தை திருமணம் | தினமணி |
| **145.** | 23.06.2009 | **ஈரோடு மாவட்டம்:** சோலார் பகுதியைச் சேர்ந்த அருமைராஜன். சோலார் நகரைச் சேர்ந்த உமாமகேஸ்வரி என்பவரை கடந்த சில தினங்களுக்கு முன்பு வீட்டில் மர்ம நபர்களால் | காவல் நிலைய மரணம் | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொலை செய்யப்பட்டு கிடந்தார். இது தொடர்பாக 3 பேரை சந்தேகத்தின் பேரில் விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில் போலீசார் விசாரணையில் இருந்த அருமைராஜன் மர்மமான முறையில் இறந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு. | | |
| 146. | 23.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** பாளையங்–கோட்டை சிறை கைதி ராஜன் (எ) ராமநாதன். சிறையில் சில தினங்களுக்கு முன்பு திடீர் சோதனை நடத்தியதில் செல்போன்கள் கிடைத்தது. இதை இராஜன் தான் காட்டி கொடுத்ததாக ராஜனை கட்டி அடித்து உதைத்து சிறுநீரை படித்து வாயில் ஊற்றி சித்திரவதை செய்துள்ளனர். இதில் மயக்கமடைந்த இராஜன் மருத்துவமனையில் அனுமதி. | சிறைக் கைதி வன்முறை | தினகரன் |
| 147. | 23.06.2009 | **மதுரை மாவட்டம்:** அனுப்பானடியைச் சேர்ந்த பாலாஜி வெங்கட்ராமன் மனைவி பரமேஸ்வரி. கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட குடும்பத் தகராறில் பரமேஸ்வரி தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 148. | 24.06.2009 | **ஈரோடு மாவட்டம்:** பவானி குமாரப்–பாளையத்தைச் சேர்ந்த விஜயலட்சுமிக்கு கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தனது 1 1/2 வயது குழந்தையுடன் விடுதியில் தங்கியிருந்தார். இவர் பெண்கள் காப்பாக நிர்வாகி பிரபாவதி ராஜனிடம் தனது சம்பளத்தில் ரூ. 8 ஆயிரம் கொடுத்து வைத்திருந்தார். இதை திருப்பி தருமாறு கேட்டுள்ளார். இதற்கு நிர்வாகிகள் குழந்தையை விற்று பணம் தருகிறோம் என்று கூறி விஜயலட்சுமியை செருப்பால் அடித்து சித்வரதை செயதுள்ளனர். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 149. | 24.06.2009 | **மதுரை மாவட்டம்:** கள்ளந்திரி அருகே 100 நாள் வேலை திட்டத்தில் கூலி குறைவாக கொடுத்ததால் வருவாய் அலுவலகத்தை பெண்கள் முற்றுகையிட்டனர். | லஞ்சம் | மாலைமுரசு |
| 150. | 24.06.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஜெகநாதன் மகள் மாலா. மாலா அப்பகுதியில் உள்ள கம்ப்யூட்டர் பயிற்சி மையத்தில் ஆசிரியையாக வேலை பார்த்து வந்தவர். கடந்த மாதம் 2ம் தேதியில் இருந்து காணவில்லை. இந்நிலையில் மாலாவை அப்பகுதியைச் சேர்ந்த ஜெபக்குமார் கடத்தி இருக்கலாம் என போலீசார் சந்தேகம். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 151. | 24.06.2009 | **மதுரை மாவட்டம்:** நேருநகர் பகுதியைச் சேர்ந்த ரவி மனைவி பஞ்சாயி (32) மகள் ஜோதி (15). ரவி வெளிநாட்டில் வேலை செய்து வந்துள்ளார். இதனால் பஞ்சாயி மற்றும் ஜோதி தனியாக வீட்டில் வசித்து வந்துள்ளனர். அப்பகுதியைச் சேர்ந்த பாண்டியராஜன் (22) மற்றும் சிவக்குமார் (16) தினமும் கேலி கிண்டல் செய்து வந்துள்ளனர். இதைப்பற்றி பஞ்சாயி எதிர்த்து கேட்டதற்கு ஆபாச வார்த்தைகளால் திட்டி கையை பிடித்து இழுத்து சேலையை பிடிதது இழுத்தும் சில்மிஷம் செய்துள்ளனர். இதுபற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 152. | 24.06.2009 | **புதுக்கோட்டை மாவட்டம்:** திருமயத்தை சேர்ந்த முருகேசன் மனைவி துர்கா மகன்கள். முருகேசனுக்கும், துர்காவுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் முருகேசன் துர்கா வீட்டிற்கு சென்று சண்டை போட்டு தனது 5 வயது மகளை அழைத்து சென்று மதுக்கடையில் ரூ. 5 ஆயிரம் ரூபாய்க்கு விற்க முயன்றுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 153. | 24.06.2009 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** திருப்பனப்பள்ளி முனிரத்தினம் மனைவி கல்பனா. முனிரத்தினம் பூனாவில் ராணுவ வீரராக பணியாற்றி வருகிறார். விடுமுறையில் வீடு வந்தவர் தனது குடும்பத்தாருடன் 4 மாத கர்ப்பினியான கல்பனாவை வரதட்சணைக் கேட்டு அடித்து சித்ரவதை செய்துள்ளனர். இதில் கல்பனா உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணைக் கொடுமை. கொலை | தினகரன் |
| 154. | 24.06.2009 | **தர்மபுரி மாவட்டம்:** தேர்தல் தோல்வி ஆத்திரத்தால் காலனி மக்கள் மீது பா.ம.கவினர் தாக்குதல் நடத்தினர். அதனால் பயந்துபோன கிராம மக்கள் ஊரைக் காலி செய்து அருகில் உள்ள கிராமத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். | தலித் மக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 155. | 25.06.2009 | **சென்னை மாவட்டம்:** கொட்டிவாக்கம் எம்.ஜி.ஆர் தெருவைச் சேர்ந்தவர் குமார் மகள் சித்ராதேவி (21). சித்ராதேவி அப்பகுதியைச் சேர்ந்த மோகன் என்பவரை காதலித்துள்ளார். இது பெற்றோருக்கு தெரிய வரவே பெற்றோர் திருமணம் செய்து வைக்க முடிவு செய்துள்ளனர். இந்நிலையில் மோகன் கூடுதல் பணம் கேட்டு சித்ராவை சித்திரவதை செய்துள்ளார். இதனால் மனமுடைந்த சித்ரா தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணைக் கொடுமை. கொலை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 156. | 25.06.2009 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி வழியாக கேரளாவுக்கு மணல் கடத்திய 10 லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டன. | மணல் கடத்தல் | தினகரன் |
| 157. | 25.06.2009 | **மதுரை மாவட்டம்:** கீரைத்துறையைச் சேர்ந்தவர் பாண்டியம்மாள். பெருங்குடி பகுதியில் புதிதாக வீடு கட்டியுள்ளார். அப்பகுதியைச் சேர்ந்த சிலர் வீட்டை இடித்துள்ளனர். இது பற்றி போலீசார் புகார் கொடுக்க சென்றவரை கொலை செய்ய முயற்சி. இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 158. | 25.06.2009 | **மதுரை மாவட்டம்:** பழங்காநத்தம், வில்லாபுரம் பகுதிகளில் உள்ள ரேஷன் கடைகளில் மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு மேற்கொண்டதில் 3 விற்பனையாளர்கள் கணக்கில் வராமல் இருந்ததால் மாவட்ட ஆட்சியர் சஸ்பெண்ட் செய்தார். | ரேசன் கடை ஊழல் | தினமணி |
| 159. | 25.06.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே பெருமாள் கோவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி. பெருமாள் கோவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை தரம் உயர்த்தாததை கண்டித்து குழந்தைகளுடன் பொது மக்கள் பள்ளிக்கு பூட்டு போட்டு போராட்டம் நடத்தினர். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 160. | 25.06.2009 | **தேனி மாவட்டம்:** கடமலை–மயிலை ஒன்றியம் வருசநாடு அருகே உள்ள தர்மராஜபுரத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் விஜயகுமார். விஜயகுமார் 11ம் வகுப்பில் தேர்ச்சி பெறவில்லை. இதனால் தனித்தேர்வு விண்ணப்பித்தார். தனித் தேர்வு எழுதியிருந்தார். இவரது விடைத்தாளை அப்பள்ளி மாணவர்கள் திருத்தியுள்ளனர். விஜயகுமார் தேர்ச்சி பெற்றுள்ளார். ஆனால் ஆசிரியர் இதை மறைத்து மதிப்பெண் குறைந்து தேர்ச்சி பெறவில்லை என்று கூறினார். இதனால் விஜயகுமார் மற்றும் 50 மாணவர்கள் சேர்ந்து பஸ் மறியலில் ஈடுபட்டனர். | வகுப்பறை வன்முறை | தமிழ்சுடர் |
| 161. | 26.06.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி சொக்கதேவன் பட்டியைச் சேர்ந்த சொக்கலிங்கம் நெல் வியாபாரம் செய்து வருகிறார். இவரை கடந்த 16ம் தேதி குடிமைப் பொருள் இன்ஸ்பெக்டர் செல்வம் கடத்தி ரூ. 50 ஆயிரம் லஞ்சம் வாங்கியுள்ளார். இது பற்றி லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார். | லஞ்சம் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 162. | 26.06.2009 | **மதுரை மாவட்டம்:** வில்லாபுரத்தைச் சேர்ந்த நடராஜமூர்த்தி மகள் சரண்யா. சரண்யாவை அப்பகுதியைச் சேர்ந்த மாணவர் முனியசாமி ஈவ்டிசிங் செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | ஈவ்டீசிங் | தினகரன் |
| 163. | 26.06.2009 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே டி. புதுப்பட்டியைச் சேர்ந்த கோதண்டபள்ளி மகள் சகுந்தலா (28). சகுந்தலாவை அப்பகுதியைச் சேர்ந்த முருகேசன் மனைவி திலகா கடத்தி சென்றுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 164. | 26.06.2009 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே கீழவளவு பகுதியைச் சேர்ந்த செல்லப்பாண்டி மனைவி பொண்ணு. இருவருக்கும் திருமணம் முடிந்து 70 நாட்களே ஆன நிலையில் பொண்ணு தன் தாய் வீட்டிற்கு சென்று திரும்பியுள்ளார். ஆனால் செல்லப்பாண்டி எங்கே சென்று வந்தாய் என கேட்டு தொல்லைப்படுத்தியுள்ளார். இதில் மமனமுடைந்த பொண்ணு தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. தற்கொலை | தினகரன் |
| 165. | 26.06.2009 | **விருதுநகர் மாவட்டம்:** இங்லண்ட் கோப் என்ற நிறுவனத்தில் தனியார் ஆதரவற்ற குழந்தைகள் காப்பக மாணவர்கள். தனியார் காப்பக குழந்தைகளுக்கு பள்ளி நிர்வாகம் டி.சி தர மறுத்ததால் காப்பக குழந்தைகள் 110 பேர் ஒட்டு மொத்தமாக பள்ளி புறக்கணிப்பு செய்தனர். | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 166. | 26.06.2009 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அருகே டி.என். பாளையத்தை சேர்ந்த செந்திலின் 3 வயது மகள் சவுமியாவை அப்பகுதியைச் சேர்ந்த பார்த்திபன் முன் விரோதம் காரணமாக கடத்தி தனது வீட்டிற்குள் கடத்தி பெட்ரோல் குண்டால் குழந்தையை கொன்று விடுவதாக மிரட்டல். இது குறித்து போலீசில் புகார் வழக்கு பதிவு. | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 167. | 26.06.2009 | **மதுரை மாவட்டம்:** நரிமேடு பி.டி ராசன் ரோட்டை சேர்ந்த கதிர்வேல்சாமி மகள் ராணி பத்மினியை அவரது கணவர், கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். மேலும் மண்ணெணைய் ஊற்றி தீ வைக்க முயற்சித்துள்ளனர். அங்கிருந்து வந்த ராணி தல்லாகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். ஆனால் காவலர்கள் புகார் ஏற்க மறுத்துவிட்டனர். கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 168. | 26.06.2009 | **மதுரை மாவட்டம்:** உத்தங்குடி அம்பலக்காரப்பட்டியைச் சேர்ந்த ரவி மனைவி கீதாவை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளார். இது பற்றி கீதா போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 169. | 27.06.2009 | **சென்னை மாவட்டம்:** ஆழ்வார் திருநகரைச் சேர்ந்த நகைமுகன் தலைநகரம் பத்திரிகையை நடத்தி வந்தவர். இவர் கேட்ட பணத்தை கொடுக்காவிட்டால் பத்திரிகையில் உங்களைப் பற்றி அவதூறாக எழுதி விடுவேன் என்று பல பேரை மிரட்டியுள்ளார். இந்நிலையில் கோவையைச் சேர்ந்த பாரதி என்ற பெண்ணை கடத்தி பணம் பறித்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| 170. | 27.06.2009 | **திருச்சி மாவட்டம்:** தென்னூர் அண்ணா– நகரைச் சேர்ந்த ராணி மகள் மாரியம்மாள் (14). 9ம் வகுப்பு படிக்கும் மாரியம்மாளை அப்பகுதியைச் சேர்ந்த ஆனந்தகுமார், மாரியப்பன் அடிக்கடி கேலி கிண்டல் செய்துள்ளனர். இந்நிலையில் வீட்டில் தனியாக இருந்த மாரியம்மாளை ஆனந்தகுமார் பாலியல் தொந்தரவு செய்துள்ளார். இது பற்றி மாரியம்மாள் அண்ணன் ராஜா இதை தட்டி கேட்டுள்ளார். இது பற்றி ராணி ஸ்ரீரங்கம் போலீசில் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் மனமுடைந்த மாரியம்மாள் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை. தற்கொலை காவல் நிலையச் சித்திரவதை | மாலைமலர் |
| 171. | 27.06.2009 | **புதுக்கோட்டை மாவட்டம்:** விராலிமலை பெரியார்நகர் பகுதியைச் சேர்ந்த ஆதிராஜ் மகள் சரஸ்வதி திருச்சி சட்டக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். அக்கல்லூரியில் படிக்கும் 2ம் ஆண்டு மாணவர் சத்தியமூர்த்தி சரஸ்வதியை ஒருதலைபட்சமாக காதலித்துள்ளார். இதனால் மனமுடைந்த சரஸ்வதி மண்ணெணைய் ஊற்றி தீ குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 172. | 27.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** கண்டாங்கிப்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பை சேர்ந்த கணேசன் பராமரிக்கப்படாத ஆதிதிராவிடர் குடியிருப்பு வீடுகள் காலையில் திடீரென இடிந்து விழுந்தது. இதில் 2 பேர் உயிரிழந்தனர். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 173. | 27.06.2009 | **திருச்சி மாவட்டம்:** சிந்தாமணியைச் சேர்ந்த செங்குளத்தான் மனைவி மணியின் மகள் சேட் உடல் ஊனமுற்றவர். இவர் போலீஸ் | பெண்களுக்கு எதிரான பாலியல் | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | இன்ஸ்பெக்டருக்கு எதிராக மேல் அதிகாரிகளுக்கு புகார் அளித்ததால் இவர் மீது பொய் வழக்கு பதிவு செய்தனர். மேலும் இன்ஸ்பெக்டர் கண்ணன் பொன்னம்மாளை பாலியல் பலாத்காரம் செய்து இன்னொரு மகள் புஷ்பாவை மானபங்கம்படுத்தியுள்ளார். இதில் பொன்னம்மாள் தற்கொலை செய்து கொண்டார். மரண வாக்குமூலத்தில் தனது சாவுக்கு காரணம் இன்ஸ்பெக்டர் கண்ணன் என்று கூறியும் நடவடிக்கை இல்லை. | வன்முறை. காவல் நிலைய வன்முறை | |
| 174. | 27.06.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே ராமநாதபுரத்தை சேர்ந்த சோலைராஜ் மகள் சின்னத்தாயை அப்பகுதியைச் சேர்ந்த மலைச்சாமி காதலிப்பதாக கூறி பலமுறை பாலியல் உறவுகொண்டு தற்போது திருமணம் செய்ய மறுப்பு. இது பற்றி சின்னத்தாய் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |
| 175. | 27.06.2009 | **சென்னை மாவட்டம்:** அறநிலையத்துறை கோவிலை தனியார் வசம் ஒப்படைக்க இரண்டு இலட்சம் ரூபாய் பேரம் பேசி ரூ. 50 ஆயிரம் பெற்ற அறநிலைத்துறை இணை கமிஷனர் பற்றி போலீசில் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 176. | 27.06.2009 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு, பென்னாகரம் அடுத்து பூஜைகுண்டு காட்டு கொட்டாய் பகுதியைச் சேர்ந்தவர் ராஜா மகள் பாரதி (13) 13 வயதுடைய பாரதிக்கும், அப்பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய முருகனுக்கும் திருமணம் நடைபெற்றதுள்ளது. இது குறித்து போலீசில் புகார். | குழந்தை திருமணம் | தினமலர் |
| 177. | 27.06.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவில் அருகே ஆசாரிபள்ளம் தோப்பூர் பகுதியைச் சேர்ந்த கதிரேசன் (35) மனைவி தேவிகா (28). தேவகியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இதனால் மனமுடைந்த தேவிகா தனது 2 1/2 மாத கைகுழந்தையுடன் மணணெணைய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. வரதட்சணைக் கொடுமை. தற்கொலை. | தினமலர் |
| 178. | 27.06.2009 | **மதுரை மாவட்டம்:** மதுரை காம்ப்ளக்ஸ் பஸ் நிலையம் எதிரே உள்ள கட்ராபாளையம் செருப்புக்கடை உரிமையாளர்கள் சங்க செயலாளர் லியாசத்அலிகான் கடைக்கு நான்கு போலீஸ்காரர்கள் குடிபோதையில் செருப்பு | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாங்க வந்தவர்கள் கடை ஊழியரிடம் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த செருப்புக்கடை ஊழியர்கள் திடீர்நகர் போலீசிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். | | |
| 179. | 28.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** மாயாண்டி மகள் லதா (23). லதா ஈரோட்டில் ஜவுளி மில்லில் வேலை பார்த்து வந்தார். அப்பொழுது அவருடன் வேலை பார்த்த மதுரையை சேர்ந்த ரமேஸ் உடன் பழக்கம் ஏற்பட்டது. இவர்கள் இருவரும் காதலித்துள்ளனர். இந்நிலையில் ரமேஷ்–க்கு வேறு இடத்தில் பெண் பார்த்து உள்ளனர். இதனால் லதாவை திருமணம் செய்ய மறுத்து விட்டார். இந்நிலையில் லதா போலீசில் புகார் செய்தார். இது பற்றி போலீசார் இருவரையும் அழைத்து பேசினார்கள். இதில் ரமேஷ் லதாவை ஏற்க மறுத்ததால் மனமுடைந்த லதா மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. தற்கொலை | மாலைமலர் |
| 180. | 28.06.2009 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** ஊரப்பாக்கம் திமுக பஞ்சாயத்து தலைவர் குமார் கொலை செய்யப்பட்டதால் இவரது உடலை ஊர்வலமாக சுடுகாட்டுக்கு எடுத்து சென்ற போது அவரது ஆதரவாளர்கள் ரோட்டில் மறியில் ஈடுபட்டனர். இவர்களை போலீசார் தடியடி நடத்தி விரட்டியுள்ளனர். | காவல் நிலைய வன்முறை | மாலைமலர் |
| 181. | 28.06.2009 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 4 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக குடிநீர் வசதியில்லாததால் கர்ப்பினிகள், நோயாளிகள் அவதியடைந்து வருகின்றனர். | மருத்துவமனை அலட்சியம் | மாலைமலர் |
| 182. | 28.06.2009 | **மதுரை மாவட்டம்:** தாசில்தார் நகரைச் சேர்ந்த சபிதாபேகத்தை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 183. | 28.06.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** மாணவிகளை இழிவுப்படுத்தி பத்திரிகையில் செய்தி வெளியிட்டதாக கல்லூரி பேராசிரியர்கள் 3 பேர் மீது போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 184. | 28.06.2009 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் வடக்குத் தெருவைச் சேர்ந்த அங்கம்மாள் தனது அக்காள் ரேஷன் கார்டை பயன்படுத்தி | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொருட்கள் வாங்கி கொண்டிருந்தார். இதை அக்காள் மகன் லெட்சுமணன் கேட்டுள்ளார். இதற்கு அங்கம்மாள் தர மறுக்கவே தூங்கி கொண்டிருக்கும் போது பெட்ரோல் ஊற்றி தீ வைத்துள்ளார். இதில் பலத்த காயமடைந்த அங்கம்மாள் மருத்துவமனையில் அனுமதி. | | |
| 185. | 28.06.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே வெள்ளை மலைப்பட்டி அரசு கள்ளர் பள்ளி மாணவர்கள். அரசு கள்ளர் பள்ளியில் கழிப்பறை வசதி இல்லாததால் மாணவியர் அரை கி.மீ வரை பயணிக்க வேண்டிய நிலை. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 186. | 28.06.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடியைச் சேர்ந்த சத்தியமூர்த்தி மனைவி சுமதி. இருவருக்கும் இடையே குடும்பத் தகராறு ஏற்படுவதுண்டு. இதனால் மனமுடைந்த சத்தியமூர்த்தி வைகை ஆற்றங்கரையில் தீக்குளித்து உயிர் இழந்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 187. | 29.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பாசேத்தி பஜனை மடத்தெருவைச் சேர்ந்த கணேசன் சகோதரிகள் நல்லம்மாள், அங்கம்மாள் கணேசன் தாய் பெயரில் 30 சென்ட் நிலம் உள்ளது. இது தொடர்பாக கணேசனுக்கும், சகோதரிகளுக்கும் இடையே வழக்கு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் சொத்திற்காக சகோதரிகளை கணேசன் அரிவாளால் வெட்டியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 188. | 29.06.2009 | **மதுரை மாவட்டம்:** பிறந்து 2 நாட்களே ஆன் நிலையில் ஆண் குழந்தையின் சடலம் வைகை ஆற்றில் மீட்கப்பட்டது. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமணி |
| 189. | 29.06.2009 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே மலம்பட்டியைச் சேர்ந்த பூபதி மனைவி செல்வி. பூபதி வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். விடுமுறையில் வீட்டிற்கு வந்தவர் மீண்டும் வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்தார். இதனால் கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த செல்வி தூக்கிமாட்டி தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. தற்கொலை | தமிழ்சுடர் |
| 190. | 29.06.2009 | **புதுக்கோட்டை மாவட்டம்:** வடவாளம் தலித் மக்கள் கலியுக மெய்ய அய்யனார் கோயில் சகடை ஊர்வலம் 30 ஆண்டுகளாக | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடைமுறையில் இருந்து வந்ததைப்போல இந்த ஆண்டும் ஆதிதிராவிடர் வழக்கமாக சாமி கும்பிடும் இடத்தில் வழிபாடு செய்ய தடை. மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல். | | |
| 191. | 29.06.2009 | **திருச்சி மாவட்டம்:** உப்பிலியாபுரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட சோபனபுரத்தைச் சேர்ந்தவர் துரைராஜ் மகள் ஷர்மிளா (21). ஷர்மிளா கொப்பம்பட்டியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தார். இவர் அப்பகுதியை சேர்ந்த சதீஸ்குமாரை காதலித்துள்ளார். இதற்கு சதீஸ்குமார் பெற்றோர் திட்டியுள்ளனர். இதனால் மனமுடைந்த ஷர்மிளா தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. தற்கொலை | தீக்கதிர் |
| 192. | 29.06.2009 | **திருவாரூர் மாவட்டம்:** திருத்துறைப்பூண்டி அருகே உள்ள பாமணியை சேர்ந்த கிருஷ்ணன் மகள் அஞ்சுப்பிரியா. அரசு மேல்நிலைப் பள்ளியில் +2 படித்து வந்தார். இவருடன் படிக்கும் மாணவர்க்ள வெற்றிவேல், கணேசன், ரஞ்சித் ஆகியோர் அஞ்சுப்பிரியாவை கேலி கிண்டல் செய்துள்ளனர். இதனால் அஞ்சுப்பிரியா டி.சி வாங்கி வேறு பள்ளியில் சேர்ந்தார். இருந்த பொழுதும் வெற்றிவேல், கணேசன், ரஞ்சித் வீட்டிற்குள் புகுந்து கேலி கிண்டல் செய்ததால் இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை. ஈவ்டீசிங் | தினகரன் |
| 193. | 29.06.2009 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை அருகே வலசுப்பட்டியைச் சேர்ந்த ராசு. இந்து ஊராணிகவுண்டர் சமூகத்தில் 3 பேர் கட்டப்பஞ்சாயத்து செய்வதாக புகார் கூறியுள்ளார். மேலும் இவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோர்டில் மனு தாக்கல் செய்துள்ளார். | கட்டப்பஞ்சாய்து. | தினகரன் |
| 194. | 29.06.2009 | **திருச்சி மாவட்டம்:** மேட்டூர் இருக்குனூர் அருகில் உள்ள மனச்சநல்லூர் பகுதியில் நடந்த ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பாளர் நிகழ்ச்சிக்கு செல்லும் இடத்தில் ஏற்பட்ட நெரிசலை சமாளிக்க போலீசார் தடியடி நடத்தினர். | காவல் நிலைய வன்முறை | The New Indian Express |
| 195. | 30.06.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி, முதுகுளத்தூர் அருகில் உள்ள கூவர் கூட்டம் | பெண்களுக்கு எதிரான | தமிழ்முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிராமத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் மகள் வசந்தா (13). 8ம் வகுப்பு படிக்கும் வசந்தா பள்ளி சென்றவர் வீடு திரும்பவில்லை. அப்பகுதியைச் சேர்ந்த மாதவன் கட்டாய தாலி கட்டியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு. | வன்முறை | |
| **196.** | 30.06.2009 | **வேலூர் மாவட்டம்:** வேப்பங்குப்பம் அடுத்த லட்சிகன்பாளையத்தை சேர்ந்த ரம்யா. ரம்யா குருவராஜ்பாளையத்தில் உள்ள சுதர்சனை கிளினிக்கில் வேலை செய்து வந்தார். இந்நிலையில் ரம்யாவுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதால் கிளினிக்கில் இருந்து வேலையை விட்டு நிற்க போவதாக டாக்டர் சுதர்சனிடம் கூறினார். ரம்யா வேலையை விட்டு போனால் வருமானம் பாதிக்கும் வேறு ஆட்சள் கிடைக்க மாட்டார்கள் என்பதால் மாப்பிள்ளைக்கு மொட்டை கடிதம் எழுதி அவதூறாக துண்டு நோட்டீஸ்களை அடித்து பிரச்சாரம் செய்துள்ளார். இதனால் ரம்பாவின் திருமணம் நின்றது. இது அறிந்த ரம்யா போலீசில் புகார் கூறியுள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. காவல் நிலையச் சித்திரவதை. | தமிழ்முரசு |
| **197.** | 30.06.2009 | **நீலகிரி மாவட்டம்:** குன்னூர் குன்னக்கம்பை கிராமத்தை சேர்ந்த சிவா மகள் கனிமொழி. 19 வயதுடைய கனிமொழி குன்னூரில் உள்ள ஜவுளிக் கடையில் வேலை பார்த்து வந்தவர் கடந்த 19ம் தேதி கடைக்கு சென்ற கனிமொழி மயங்கிய நிலையில் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதுபற்றி சிவா புகார் கொடுக்க மேல்குன்னத்தூர் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றபோது சிவாவை இன்ஸ்பெக்டர் தரக்குறைவாக பேசியுள்ளார். இதற்கிடையே தனது மகள் சாவில் மர்மம் இருப்பதாக மகள் புதைக்கப்பட்ட இடத்தில் சிவா உண்ணாவிரதம் மெற்க்கொண்டுள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| **198.** | 30.06.2009 | **மதுரை மாவட்டம்:** கூடல்நகர் பகுதி ஆனந்தநகரைச் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி மகன் ஆனந்தி. ஆனந்தி பி.காம் சி.ஏ பட்டப்படிப்பு படித்து வந்தார். இவர் சமீபத்தில் நடைபெற்ற தேர்வில் 3 பாடங்களில் தோல்வி அடைந்தார். இதனால் மனமுடைந்த ஆனந்தி தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| **199.** | 30.06.2009 | **சிவகங்கை மாவட்டம்:** சோழபுரத்தை சேர்ந்த சந்திரசேகர் மகள் சுந்தரி ஒக்கூரில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த வியாழக்கிழமை உறவினர் திருமணத்திற்கு மதுரை செல்வதற்காக ஒரு நாள் விடுமுறை கேட்டுள்ளார். இதற்கு | வகுப்பறை வன்முறை. தற்கொலை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆசிரியர் ஜான்பிரிட்டோ மறுப்பு தெரிவித்துள்ளார். இருந்தாலும் சுந்தரி விடுப்பு எடுத்துள்ளார். மறுநாள் சுந்தரி பள்ளிக்கு சென்ற போது ஆசிரியர் பிரிட்டோ கடுமையான வார்த்தைகளால் திட்டி தண்டனை கொடுத்துள்ளார். இதனால் மனமுடைந்த சுந்தரி தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். | | |
| 200. | 30.06.2009 | **மதுரை மாவட்டம்:** டி. கல்லுப்பட்டி அருகே கே. சந்திரப்பட்டியைச் சேர்ந்த துரைராஜ் மனைவி மலர். மலர் மீது கணவர் துரைராஜ் சந்தேகப்பட்டு அடிக்கடை சண்டை போட்டுள்ளார். துரைராஜ் தனது சகோதரரர்களுடன் மலரை தாக்கியுள்ளார். இதை தடுக்க வந்த மலர் சகோதரி கோடிஸ்வரியையும் தாக்கினார். இதில் காயமடைந்த சகோதரிகள் மருத்துவமனையில் அனுமதி. போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 201. | 30.06.2009 | **தஞ்சாவூர் மாவட்டம்:** அம்மாபேட்டை தலித் மக்கள். 26.06.09 அன்று முதுகுளத்தோர் பாதுகாப்பு பேரவை சார்பில் தீண்டாமை வன்கொடுமை தடுப்பு சட்டத்தை எதிர்த்து போராட்டம் நடந்தது. இவ்வார்ப்பாட்டத்தில் தலித் மக்களின் பிறப்பை இழிவுப்படுத்தும் வகையில் பேசியுள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் 27.06.09 விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். ஆர்பாட்டம் முடிந்த பிறகு விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றிய செயலாளர் கண்ணனை கடத்தி சென்றுள்ளனர்.இதுவரை காணவில்லை. இதனால் விடுதலை சிறுத்தை கட்சியினர் ஆர்பாட்டம் நடத்தினர். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 202. | 30.06.2009 | **தேனி மாவட்டம்:** போடி அருகே சிலமலையை சேர்ந்த முத்துமாரி கணவர் கட்டமலை இறந்து விட்டதால் முத்துமாரி சேகர் என்பவர் தோட்டத்தில் வேலை செய்து வந்தார். முத்துமாரியை சேகருடன் தொடர்பு இருப்பதாக சேகரின் மனைவி நினைத்து வேலையில் இருந்து நீக்கிவிட்டனர். மேலும் முத்துமாரியை வலுக்கட்டாயமாக இழுத்து சென்று உடல் முழுவதும் சூடு வைத்து சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 203. | 30.06.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இளம் பெண்களிடம் ஆபாச எஸ்.எம்.எஸ் அனுப்பி தங்கள் பிடியில் சிக்க வைக்கும் கும்பலை சேர்ந்த இரண்டு மாணவர்களை போலீசார் கைது செய்தனர். இதில் தொடர்புடைய கல்லூரி மாணவர்களை தேடி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர். |

மக்கள் கண்காணிப்பகம்